# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

Translated from
BS#940
Jan-Feb 2024

**பொருளடக்கம்**


✡ சட்டவாக்கியம் – 2024 கர்த்தருடைய விளக்கு ..................... 2

✡ அவர் முதலாவது என்னிடத்தில் அன்புகூர்ந்தார்............................. 12

✡ வேதாகமம் பேசுகிறது ...................... 17



BS Tamil Version - 82 2024

## சட்டவாக்கியம் - 2024

# கர்த்தருடைய விளக்கு

Motto Text - 2024 - The Lamp of the Lord

**சங்கீதம் 119:105**

நமது கர்த்தருடைய வெளிச்சம் அவர் வாழ்ந்த காலத்தில் உலகத்தின் ஒரு சிறிய மூலையில் பிரகாசித்தது. அவருடைய விளக்கிலிருந்து அவரை பின்பற்றின அநேகர் தங்கள் விளக்குகளை ஏற்றி பிரகாசிக்கச் செய்தனர். எஜமானருடைய அறிவுறுத்தல் என்னவெனில் "**மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது**" (மத். 5:16); விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக் காமல், விளக்குத்தண்டின் மேல் வையுங்கள், அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் (மத். 5:15) என்பதாகும். "**மனுஷனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவன் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறான்.... சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாகச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான்**" (யோவா. 3:19-21) என்ற அறிவுறுத்தலையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்.

இந்த வேதவாக்கியத்தில் தீர்க்கதரிசியானவர் தேவனுடைய வார்த்தையைக் குறித்தும், நித்திய ஜீவனுக் கான செய்தியைக் குறித்தும், பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கான நம்பிக்கைகள் மற்றும் சந்தோஷங்கள் ஆகியவற்றிற்கான அடிப்படையான காரியங்களைக் குறித்தும் எடுத்துரைக்கிறார். இந்த விளக்கு மற்றும் ஒளியின் அவசியத்தை வேதமாணாக்கர்களாக நாம் தெளிவாகக் காண்கிறோம். வெளிச்சம் இல்லாதவர்கள் இருளில் தடுமாறுகிறார்கள் என்பதற்கான சான்றுகள் ஏராளம் இருக்கின்ற அதே வேளையில், தெய்வீக வார்த்தையின் வெளிச்சத்தைக் கொண்டிருக்கிற நாம் மற்றவர்களைப் போல இருளிலிருக்கிறவர்களாக இல்லை. "**நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்**" (1 தெச. 5:5). நாமெல்லாரும் புதிய நேமகத்தைச் சேர்ந்தவர்கள் (அல்லது இனி வரும் உலகத்தை சேர்ந்தவர்கள்). நம்முடைய குடியுரிமையானது புதிய ராஜ்யத்தில் இருக்கிறது. விசுவாசத்தினாலே நாம் உலகத்திற்கு மரித்தும் தேவனுடைய பார்வையில் உயிரோடிருக்கிறவர்களாயுமிருக்கிறோம். எனவே தற்காலத்தி லிருக்கும் இருளிலும்கூட ஒளியின் பிள்ளைகளாக




எண்ணப்படுகிறோம். நம்முடைய புரிந்து கொள்ளுதலின் கண்கள் தெய்வீக வார்த்தையின் நம்பிக்கைகளாலும், கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களாலும் ஒளியூட்டப்படுகின்றன.

ஒளியானது, அப்போஸ்தலர் கூறுவது போல தேவனுடைய வார்த்தையின் மீதான விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மூலமாக நம்முடைய இருதயங்களில் பிரகாசித்துள்ளது. காரியங்களின் வெளிப்புறமான இயல்பான நிலைப்பாட்டில் பார்த்தோமானால் நாம் உலகத்தில் எஞ்சியவர்களாகத்தான் இருப்போம். நாம் காணப்படக்கூடியவைகளாகிய இவை தற்காலிகமானவை; இதனை விசுவாசத்தின் மூலமாக நாம் அறிந்திருக்கிறோம், நம்முடைய கண்களை மூடிக்கொண்டு பார்ப்பது போலான விகிதாச்சாரத்தில் இது இருக்கிறது. மேலும் இதுவரை காணப்படாதவைகளுக்கும் மற்றும் நித்தியமானவைகளுக்கும் நம்முடைய புரிந்து கொள்ளுதலின் கண்களை திறக்கும்போது அந்த விகிதாச்சாரத்தின் அளவில் மட்டுமே விசுவாசத்தின் ஒளி நம்முடைய இருதயங்களில் பிரகாசிக்கின்றது. மகத்தான எதிர்ப்பார்ப்பு என்னவெனில், விரைவில் நீதியின் சூரியனுடைய பிரகாசமும், அதின் கதிரொளிகளும் பூமியின் கடைகோடி பகுதிகள் வரைக்கும் ஒளிரும். ஆதாமினுடைய சாபத்தின் பங்காளிகளான ஆதாமின் ஒவ்வொரு பிள்ளைகளும் இறுதியில் மேசியாவின் மாபெரும் ஆசீர்வாதத்தில் பங்காளிகளாவதற்காக ஆயிர வருஷ யுகத்தினை நிறுவக்கூடிய அந்த மாபெரும் ஒளியின் செல்வாக்கின் கீழாக, ஆசீர்வாதமும், மகிமையும், கர்த்தரைக் குறித்ததான அறிவையும் கொண்ட நாளுக்கு

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

கொண்டு வரப்படுவார்கள். “**உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த (இறுதி முடிவான) மெய்யான ஒளி.**” (யோவா. 1:9). ஆங்கில வேதாகமம் பார்க்கவும்.

யோவான் 1:9-ல் யேகோவா தேவனிடமிருந்து கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியை நாம் சிந்திப்போம்! இந்த வசனத்தின் தீர்க்கதரிசனம் அந்த காலத்தில் வாழ்ந்தவர்களையும் தாண்டி, மரணத்தின் நிழலில் இருப்பவர்களுக்கும் ஒளியை பிரகாசிக்கச் செய்யும் என்று நமக்கு உறுதியளிக்கிறது. மரண நிழலில் (கல்லறையில்) - இது ஹேட்ஸ் - Hades என்பதற்குரிய சரியான விளக்கமாகும். Hades பாதாளத்தில் இருக்கிறவர்கள் இருளில் இருக்கிறவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்து நம்மெல்லாருக்காகவும் ஒரே தரம் மரித்ததினால் நமது மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினர் மீதும் ஒளியானது பிரகாசிக்க வேண்டும். ஆதாமினுடைய எல்லா பிள்ளைகளும் பிறப்பதற்கு முன்பாகவே தண்டிக்கப்பட்டது போல, பெரும்பான்மையான ஆதாமின் பிள்ளைகள் அவர்களுடைய பிறப்பிற்கு முன்பே கிறிஸ்துவின் மரணத்தின் பலன்களைப் பெற்றனர். தகப்பனாகிய ஆதாம் மீது வந்த சாபத்தில் அவர்கள் நிச்சயமாகவே பங்கெடுத்தது போல கிறிஸ்துவின் மீட்புப் பணியிலிருந்தும் ஓர் ஆசீர்வாதத்தை நிச்சயமாகப் பெறுவார்கள். (ரோம. 5:12).

இப்போது தேவனுடைய இரக்கத்தைப் பெறுகிறவர்களுக்கும் இது பொருந்தும். அது ஒரு பரிசாக இருக்கிறது. அவர்களால் (ஆதாமின் பிள்ளைகளால்) அதற்காக (அந்தப் பரிசை பெறுவதற்காக) எதுவும் செய்ய இயலாது. அவர்கள் மன்னிக்கப்படுவார்கள் என்று மட்டுமே உறுதியளிக்கப்படுகிறார்கள். வித்தியாசம் என்னவெனில், இப்பொழுது வெகு சிலருக்கே பார்ப்பதற்கு கண்ணும், கேட்பதற்கு காதும், விசுவாசத்தை கேட்பதன் மூலம் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய நற்செய்தியில் நமக்குச் சொல்லப்பட்டபடி தேவனுடைய இரக்கத்தை பாராட்டக்கூடிய இருதயமும் இருக்கிறது. அவருடைய விசேஷித்த ஜனங்களுக்கான தெரிந்தெடுப்பு முடிந்ததும், தரிசித்து நடப்பதும், அறிவும், விசுவாசத்தின் இடத்தைப் பெரிய அளவில் பிடிக்கும். உலகமானது கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய கிருபையையும், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும், அவர்களுக்கும் நித்திய ஜீவன் அளிக்கப்படுவதையும் உணர்ந்து ஏற்றுக் கொண்டார்களானால் தேவனுடைய பெரிய பரிசாகிய பெரிய கொள்ளைப்பொருட்களை பங்கிடுவதில் பொதுவாகவே மகிழ்ச்சியடைவார்கள்.

இதற்கு நேர்மாறாக, “**பின்னும் அவர் அவர்களை நோக்கி, விளக்கைத் தண்டின் மேல் வைக்கிறதற்கேயன்றி, மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும், வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா?**” என்பதாக மாற். 4:21-ன் வார்த்தைகளை நாம் பெற்றிருக்கிறோம். இந்த வேத வசனக் குறிப்பில், இயேசுவானவர் விளக்கை - சத்தியத்தின் ஒளியை குறிப்பதற்காக பயன்படுத்தி (சங். 119:105), தன்னை




உலகத்தின் ஒளி என்று அழைத்தார். (யோவா. 8:12). என்றாலும், தேவனுடைய வார்த்தையின் ஒளி மறைக்கப்பட வேண்டும் என்று கொடுக்கப்படவில்லை. மாறாக, இந்த ஒளியைப் பிடித்துக் கொண்டு அதை மற்றவர்களுடன் இலவசமாய்ப் பகிர்ந்து கொள்வதில் தங்கள் கடமையையும் சிலாக்கியத்தையும் இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு உணர்த்தினார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் அவருடைய முன்னேற்பாடுகளையும், ஒழுங்குமுறைகளையும் கற்றுக் கொள்ளும் போது, அறிந்து கொள்ள வேண்டியவைகளில் ஒன்று என்னவெனில், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களாகிய “**நீதிமான்களின் பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாக பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போல் இருக்கிறது.**” “வார்த்தையாயிருக்கிற” அதுவே நமது கால்களுக்கு தீபமாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறது. (நீதி. 4:18; சங். 119:105). எபிஃபெனி தூதுவர் மற்றும் அவருடைய விசேஷித்த உதவியாளர்களால் வேதவாக்கியங்களிலிருந்து விளக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறபடி, கர்த்தருடைய ஏற்பாடுகளுக்கு இசைவாகவும், அவருடைய ஒழுங்குமுறைகளின்படியேயும் அவரிடமிருந்து வரும் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் சத்தியங்களை (இவைகள் எப்போதும் கடந்தகால சத்தியங்களுடன் இசைவிணக்கமாயிருக்கிறது. E.Vol.5, PP-31, Par.1, 35-39) நாம் தேடுவதில் ஜாக்கிரதையாக இருப்போமாக.

1950-ம் ஆண்டு வரை அதன் கடைசி உறுப்பினர் (அவர் ஒரு நட்சத்திர அங்கத்தினராக இருக்க வேண்டும் என்று வேத வசனங்கள் காட்டுகின்றது) பூமியை விட்டு செல்லும் வரைக்கும் அல்லது திரைக்கு அப்பால் செல்லும் வரைக்கும் கர்த்தர் சிறுமந்தைக்கு கொடுத்த அனைத்து சத்தியங்களையும், அதற்கு பின்பும் கூட நம்முடைய கர்த்தர் மிகுந்த இரக்கத்துடன் அவர்களுக்கு கொடுத்த சத்தியங்களையும் திரள்கூட்டம் வைத்திருந்தது. ஜாண்சன் போதகர் வேதவாக்கியங்களிலிருந்து (PT 1944, பக்கங்கள் 28-32, குறிப்பாக பக்கம்-29, Col-2, top) சிறுமந்தையானது உலகை விட்டு திரைக்கு அப்பால் செல்லும் வரை நட்சத்திர அங்கத்தினர்கள் சிறுமந்தைக்காக முழு ஊழியத்தை பெற்றிருப்பார்கள் என்றும், நட்சத்திர அங்கத்தினர்கள் திரள்கூட்டத்தாருக்கு பகுதியளவே (அக்.22, 1950 வரை)

ஊழியம் செய்வார்கள் என்றும் மற்றும் திரள் கூட்டத்தார் ஒரு நட்சத்திர அங்கத்தினரிடம் இருந்து நேரடியாக ஊழியம் பெறாமல், தங்களுக்குள்ளே ஊழியம் செய்ய வேண்டும் என்றும் (அதாவது இது முன்பு நட்சத்திர அங்கத்தினரால் நேரடியாக வழங்கப்பட்ட ஊழியத்தை போன்ற ஊழியத்தை செய்யும்) ஆனால் இப்போது அவர்களின் எழுத்துக்கள் மூலம் மட்டுமே பெற முடியும் என்றும் காட்டினார்.

சிறுமந்தையினுடைய சத்தியத்தை (பரோஷியா மற்றும் எபிஃபெனி சத்தியம்) திரள் கூட்டத்தாருக்கு கொடுப்பேன் என்பதை கர்த்தர் ஜாண்சன் போதகர் மூலமாக விளக்கிக் காட்டும் போது, வாலிபரான பாத்திரவான்களும் மற்றவர்களும் அதைப் புரிந்து கொள்வதிலும் அனுபவிப்பதிலும் பங்கெடுக்க முடியாது என்று அர்த்தப்படுத்தவில்லை, மாறாக பொதுவான வாய்க்கருவியாக செயல்படும் உரிமையும், பரோஷியா மற்றும் எபிஃபெனி சத்தியங்களும் திரள் கூட்டத்தாரின் கைகளில் (வாலிபரான பாத்திரவான்கள் அல்லது மற்றவர்களின் கைகளில் அல்ல) ஒப்படைக்கப்பட்டன என்று அவர் அர்த்தப்படுத்தினார். ஏற்கனவே பெறப்பட்ட சத்தியங்களை உறுதிப்படுத்துவது, பாதுகாப்பது, முன்னெடுப்பது, அலங்கரித்து அழகுப்படுத்துவது மற்றும் கர்த்தர் திறந்து வெளிப்படுத்துவது போல, முன்னேற்றமடையும் சத்தியத்தை பாதுகாப்பதும், அலங்கரிப்பதும் அவர்களின் சிறப்புக் கடமையாகும்.

மேலும், "சிறுமந்தை தனது முதன்மையான ஊழியத்தை திரள் கூட்டத்திற்கும் அதன் இரண்டாம் நிலை ஊழியத்தை வாலிபரான பாத்திரவான்களுக்கும் கொடுக்கும்" என்பதை கர்த்தர் ஜாண்சன் போதகர் மூலமாக வேதவாக்கியங்களிலிருந்து விளக்கிக் காட்டினார். (E.Vol.10, PP-658, top). அதோடு கூட சிறிய அளவிலான நிறைவேறுதலில் அதிலிருக்கக்கூடிய நல்ல லேவியர்கள் பென்யமினால் அடையாளப்படுத்தப்படுவதை குறித்தும் அவர்கள் நிறைவேறுதலான 300 வெள்ளிக்காசுகளை பெறுவதாகிய, திரள் கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்களுடைய விஷயங்களைப் பற்றினதான முழுமையடைந்த சத்தியத்தை குறித்தும், ஐந்து மாற்று வஸ்திரங்களின் அங்கீகாரங்களைக் குறித்தும் விளக்கிக் காட்டினார். (ஆதி. 45:22, E.Vol.10, PP-609, 651; comp - PT 1956 PP-29, 66, Par.2) நிறைவேறுதலான யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம், நிறைவேறுதலான பென்யமீனின் சாக்கில் வைக்கப்பட்டதும், நிறைவான உண்மை நிகழ்வுகளுடனான இணக்கமும் நல்ல லேவியர்களின் அதிகார செயல் எல்லைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஐந்து தொகுப்பு அங்கீகாரங்களான (1) திரள் கூட்டம் (2) வாலிபரான பாத்திரவான்கள் (3) பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், (4) குறிப்பாக, எபிஃபெனி பாளையத்துக்காக விசுவாசமுள்ள தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்கள் (5) எபிஃபெனி பாளையத்துக்கான விசுவாசமுள்ள யூதர்கள் என்பதாக நாம் புரிந்து கொள்கிறோம்.

தேவனுடைய வார்த்தையின் செல்வாக்கின் கீழாக ஒரு குவாசி எலெக்ட் வகுப்பும் முன்னேற்றமடைந்து கொண்டே வருகிறது. நோவாவின் பேழைக்குள் சென்ற சுத்தமான மிருகங்களால் இந்த வகுப்பு சித்தரிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பேசும்போது அவர்கள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளனர் (1) பிரதிஷ்டை செய்யாவிட்டாலும் யூத மற்றும் சுவிசேஷ யுகங்களில் விசுவாசத்திலும், நடைமுறையிலும் ஆபிரகாமிய மற்றும் மோசேயின் உடன்படிக்கைகளுக்கு இணக்கமாக இருக்கக் கூடிய யூதர்கள் (2) நமது நாட்கள் உட்பட, சுவிசேஷ யுகம் முழுவதும், பிரதிஷ்டை செய்யாவிட்டாலும் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவை தங்களின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, மீட்கும் பொருளுக்கும், நீதிக்கும் விசுவாசமாக இருக்கக் கூடிய புறஜாதிகள் (மற்றும் சில யூதர்கள்) (3) பரிசுத்த பெரும்பாதை திறக்கப்படுவதற்கு முன்பாகவும், வாலிபராகிய பாத்திரவான்களுக்கான அழைப்பு முடிந்த பின்பும் பிரதிஷ்டை செய்தவர்களான பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள். (தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு வகுப்பார்கள் மற்றும் குவாசி எலெக்ட் வகுப்பாருக்கான முழுமையான விளக்கத்திற்கு PT 1955, பக்கம் 21-23-ஐ பார்க்கவும்).

வந்து கொண்டிருக்கக் கூடிய ஆயிர வருட யுகத்தில், அவிசுவாசிகளை விடவும் குவாசி எலெக்ட் வகுப்பார் தேவனுடைய தயவினால் உயர்ந்த நிலையை பெற்றிருப்பார்கள். இது யோவேல் - 2:28-ல் விளக்கப்பட்டுள்ளது. அங்கே அவர்கள் (அவிசுவாசிகள்) விசுவாசமற்ற வகுப்பாராக குமாரர் வகுப்பாருக்கு நேர்மாறான பலவீனமானவர்களாயிருக்கக்கூடிய குமாரத்திகள் வகுப்பாராக குறிப்பிடப்படுகிறார்கள். குவாசி எலெக்ட் மற்றும், தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கும் (புறஜாதிகள் மற்றும் பொதுவான மனுக்குலத்தின் வெகுஜனங்கள்) இடையேயான வேறுபாடு ஏசா. 60:4-ல் காணப்படுகிறது. இந்த அத்தியாயம் ஆயிர வருட யுக நிலைமைகளை விவரிக்கிறது. ஆவியும் மணவாட்டியும், ஆதாமின் சந்ததியில் "விருப்பமுள்ளவர்களை" வரவழைத்து ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் என அழைப்பார்கள். (வெளி. 22:17). அந்த மறுஜென்ம நாளில் "**மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது**" (மத். 19:28) மனுக்குலத்தின் வெகு ஜனங்கள் மரண நித்திரையிலிருந்து விழித்தெழுந்திருப்பார்கள். (தானி. 12:2; யோவா. 5:28,29; அப். 24:15). அவர்கள் ஆட்டுக்குட்டியானவராலும், அவருடைய உடன் சுதந்தரர்களாகிய ஆட்டுக் குட்டியானவரின் மணவாட்டியினாலும் மீண்டும் ஜீவனை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பிற்காக எழுந்திருப்பார்கள் (ரோம. 8:17; வெளி. 20:4,6). இரண்டாம் ஆதாமும் (1 கொரி. 15:45-47) இரண்டாம் ஏவாளாகவும் இருக்கக் கூடிய பூரண கிறிஸ்துவினிடமாக அவர்கள் வருவார்கள். அவர்களில் சிலர் குமாரர் வகுப்பாராக இருக்கும் (முன்பதாகவே விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட குவாசி எலெக்ட் வகுப்பார்) அதே வேளையில்

அவிசுவாசிகளாயிருக்கக் கூடிய மனுக்குலத்தின் வெகு ஜனங்கள் மற்றும் புறஜாதிகள் போன்றவர்களும் வருவார்கள். அவர்களுக்கு "**திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்**" (1 பேது. 2:3) போன்ற எளிமையான சத்தியங்கள் கற்பிக்கப்படும். இப்படிப்பட்ட பலவீனமானவர்களைத் தான் தேவன் "**உன் குமாரத்திகள் என்றும், அவர்கள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள்**" என்றும் கூறியிருக்கிறார்.

லூக். 11:1 நம்முடைய கால்களுக்கு தீபமாகவும், நம்முடைய பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கக் கூடிய மற்றொரு முறையைக் குறிப்பிடுகின்றது. "**அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்தது போல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் என்றான்.**" தம்முடைய சீஷர்களின் வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் விதமாக, ஆண்டவர் ஒரு மாதிரி ஜெபத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அது நிச்சயமாகவே, பெரும்பான்மையான ஜனங்கள் செய்யும் ஜெபங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருந்தது; இது அவர்கள் இந்த உதாரணத்தில் கவனம் செலுத்தவில்லை என்பதை தெரிவிக்கிறதாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையை கேட்பதும், அவரிடம் அளவுக்கு மீறி நாம் பேசாமலிருப்பதும் தான் சரியானதாயிருக்கிறது. அவர் நம்மிடம் பேசும்போது, நாம் கவனிப்பதில் அதிகமான கவனத்தை செலுத்த வேண்டும். ஒரு கவிஞர் இந்த முக்கியமான சிந்தனையை நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

*எஜமானரே பேசும்! உம்முடைய தாசன் கேட்கிறேன்,*
*உம்முடைய கிருபையான வார்த்தைக்காக காத்திருக்கிறேன்,*
*உற்சாகமூட்டும் உம்முடைய குரலுக்காக ஏங்குகிறேன்.*
*எஜமானரே அது இப்போது கேட்கட்டும்.*
*நீர் என்னிடம் என்ன சொல்ல போகிறீர் என்று,*
*உமக்காக நான் கவனித்துக் கொண்டேயிருக்கிறேன் கர்த்தாவே!*

நாம் "**இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.**" நமக்கு வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கும் சிறந்த விஷயங்கள் சீக்கிரமாக வந்து சேராதபோது நாம் சோர்ந்து விடக்கூடாது என்னும் அர்த்தத்தில் இதைச் செய்ய வேண்டும். வாக்குத்தத்த வார்த்தையானது நிச்சயமானவைகள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வாக்குறுதிகளில் நாம் இளைப்பாற வேண்டும் மேலும் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும், அதனுடைய நிறைவேறுதலுக்காக நம்பிக்கையுடன் பொறுமையாய் காத்திருக்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலமாக, "**உம்முடைய ராஜ்யம் வருவதாக**" என்று ஒவ்வொரு கணநேரத்திலும் அல்லது ஒவ்வொரு மணி நேரத்திலும் வார்த்தைகளை திரும்பத் திரும்பச் சொல்வதின் மூலமாக அல்லாமல், சிந்தனையையும், எதிர்பார்ப்பையும், அதற்காக காத்திருப்பதையும் தொடர்வதின் மூலமாகவும், அந்த ராஜ்யத்தின் நலன்களுக்காக உழைப்பதின் மூலமாகவும், அந்த ராஜ்யத்தில் நமக்கான பங்கினை பெற்றுக் கொள்ளும் வகையில் நம்முடைய குணாம்சங்களை தயார்படுத்துவதின் மூலமாகவுமே நாம் இடைவிடாமல் ஜெபிக்கிறோம். நம்முடைய பங்கிற்கு, நம்முடைய கர்த்தர் ஏற்கனவே பல ஆசீர்வாதங்களை வழங்கியிருக்கிறார் என்று நாம் உணர்வதால் இன்னும் பலவற்றை கேட்பதற்கு நாம் வெட்கப்பட வேண்டும். எனவே, நம்முடைய கோரிக்கைகள் குறைவாகவே இருக்க வேண்டும்.

நம்முடைய ஜெபங்கள் நன்றி செலுத்துதல்களாகவும், துதி செலுத்துதல்களாகவும், கர்த்தரிடம் நாம் கொண்டுள்ள பயபக்தி மற்றும் நம்பிக்கையின் அடையாளங்களாகவும், வாழ்க்கையினுடைய விவகாரங்களில் வழிகாட்டும் ஞானம் மற்றும் கிருபைகளுக்கான விண்ணப்பங்களாகவும் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானது தேவனுடைய செல்வாக்கு மற்றும் அவருடைய மனப்பான்மை என்பதை நாம் அறியும் போது நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நம்மை அதிக மென்மையாகவும், அதிக இரக்கமுள்ளவர்களாகவும், அதிக அன்புள்ளவர்களாகவும் மாற்றமடையச் செய்யும் தேவனுடைய பரிசுத்த ஆவியை அதிகமதிகமாக நாம் விரும்புகிறோம். கிறிஸ்துவின் சிந்தையை நாம் அதிகமதிகமாக விரும்புகிறோம். (மனம் மற்றும் ஆவி என்ற வார்த்தைகள் இங்கே ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தப்பட்டுள்ளன). இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சிந்தையை கொண்டிருக்க கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். (பிலி. 2:5-8).

ஜெபம் என்பது கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் இன்றியமையாதது என்றாலும், நாங்கள் கூறியது போல தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் நமக்கு கற்பிப்பதும், மேலும் நாம் செல்ல வேண்டிய வழியை சுட்டிக்காட்டுவதும் தேவனுடைய வார்த்தையே ஆகும். இதைக் கவனிக்கத் தவறியதே, தேவனுடைய பிள்ளைகள் எனக் கூறிக்கொள்ளும் அநேகருடைய விசுவாசத்தின் பெரும் தேவைக்கான மிகப்பெரிய காரணமாக இருந்ததாக நாங்கள் நம்புகிறோம். உலகத்தில் பாவமானது ஆட்சி செய்கிற இந்த நீண்ட மற்றும் இருண்ட இரவில் நமக்கு வழிகாட்டியாக கொடுக்கப்பட்ட ஒரே விளக்கான கர்த்தருடைய வார்த்தையைப் படிப்பதை புறக்கணிப்பு செய்துவிட்டு எவ்வளவு ஜெபம் செய்தாலும் அதற்கு ஈடாகாது. "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங். 119:105).

## யுத்தம் முதல் சமாதானம் வரை

யேகோவா தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் ஒரு யுத்தக் காலமும், ஒரு சமாதான காலமும் உள்ளடக்கமாகும், ஆம் "**ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு: வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும், ஒவ்வொரு சமயமுண்டு**" (பிர. 3:1). தற்போதைய பொல்லாத உலகத்தின் காலம் குறிப்பாக யுத்தத்தின் அல்லது போர்களின் காலமாகும். வாக்களிக்கப்பட்ட "புதிய பூமி" சமாதான காலத்தை

கொண்டு வருவதோடு, போரை அனுமதித்ததில் தேவனுடைய நோக்கம் அதன் நிறைவேற்றத்தை அடையும்.

பூமியின் அரசாங்கங்கள் அனைத்தும் தங்களுடைய ராஜினாமாக்களை ஒப்படைத்து, பூமியின் அரசாங்கத்தை தன்னுடைய தோளின்மேல் வைத்திருக்கக்கூடிய சமாதானப் பிரபுவின் அதிகாரத்தை அங்கீகரிக்கும் காலம் விரைவில் வரப்போகிறது என்று தேவனுடைய வார்த்தை நமக்கு உறுதியளிக்கின்றது. ஏசாயா 9:6 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், "வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு" என்று அழைக்கப்படுவார் என்பதாக முன்னறிவித்தது. மேலும், தேவதூதர்களால் அறிவிக்கப்பட்ட ஒருவரின் பிறப்பை பரிசுத்த லூக்கா பதிவு செய்வதோடு, பூமியில் சமாதானம் என்பதைப் பற்றிய குறிப்பையும் பதிவு செய்திருக்கிறார். அவருக்கு இயேசு என்று பெயரிடப்பட்டது (ஏசா. 9:6; லூக்கா 2:10-14) "**மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்**" வருவார் என்றும் அவருக்கு அதிகாரமும் ராஜ்யமும் கொடுக்கப்படும் என்றும் தேவன் தானியேல் மூலமாக சுட்டிக் காட்டினார். சகல தேசத்தாரும் ஜனங்களும் அவரைச் சேவிப்பார்கள், அவருடைய ராஜ்யம் ஒருபோதும் அழியாது. ராஜ்யம் பிரதானமாக பிதாவினுடையதாக இருந்தாலும், பூமியின் புதிய அரசாங்கத்தின் விவகாரங்களை நிர்வகிக்க அவர் தனது குமாரனை "**எல்லாவற்றிற்கும் சுதந்தரராக**" நியமிக்கிறார். இயேசுவானவர் தம்மைக் குறித்தான எதிர்கால தீர்மானங்களை புரிந்துக் கொண்டு, அவருடைய முதல் வருகையினுடைய ஊழியத்தின் முடிவில் தம்முடைய சீஷர்களிடம் "**வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது**" என்று குறிப்பிட்டார். (தானி. 7:13,14; எபி. 1:1-8; மத். 28:18).

வாக்களிக்கப்பட்ட சமாதானமானது, ஒருவரை-யொருவர் இப்போது வரைக்கும் அவநம்பிக்கை கொண்டி-ருக்கிற கட்சிகளால் தற்போதைய பகைமையை சரிசெய்வது மட்டுமல்ல, முதலாவது, தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையிலான ஒரு பரிசுத்த நல்லிணக்கமாகிய சமாதானத்தை மீட்டெடுப்பதும், சிருஷ்டிகருக்கும் அவரது வழிதவறிய சிருஷ்டிகளுக்கும் இடையேயான அந்த இடைவெளியை குணப்படுத்தி, அதனுடைய அனைத்து மகிமைகளிலும் சுதந்திரமான வாழ்க்கை ஓட்டத்தை சாத்தியமாக்குவதுமான சமாதானமாயிருக்கும். இரட்சகர் முதல் வருகையில் வந்தபோது அந்த இடைவெளியை குணப்படுத்துவதே அவரது நோக்கமாயிருந்தது. "**நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்.**" (யோவா. 10:10). மற்ற தெய்வீக நோக்கங்கள் முன்னேற்றமடைந்துள்ள நிலையில், அந்த வாழ்க்கை வழங்கப்படுவதானது, பூமியின் கோடிக்கணக்கானவர்கள் தீய அனுபவங்களுக்கு அடிபணியாமல், அந்த நன்மை-யானவைகளைக் காணும் போது அனைத்து நல்ல எண்ணம் கொண்ட புருஷரும், ஸ்திரீகளும் புதிய ஒழுங்கு முறையை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தூண்டப்படும் வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தெய்வீக உடன்படிக்கையின் முதல் பகுதியானது அதன் பிறகு கவனிக்கப்படுவதாயிருக்கும். "**உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் உன் தேவனாகிய யேகோவாவினிடத்தில் அன்பு கூருவாயாக.**" (மத். 22:37- - டயக்லாட் மொழிபெயர்ப்பு).




பல நகரங்களின் தெருக்கள் அமைதியின்மையின் போர்க்களமாக மாறி, சக மனிதனைக் கொலை செய்வ-தெல்லாம் சகஜமாகி வருகிறது. மனுக்குலத்தின் மனங்க-ளானது, பகைமை, போதைப் பொருள் விற்பனை, அங்கீகரிக்கப்படாத பாலியல் நடத்தை ஆகியவற்றால் நிரப்பப்படுவதை யேகோவா தேவன் அனுமதித்திருக்கிறார். கிறிஸ்தவ மனப்பான்மை கொண்ட ஜனங்கள் யுத்த நடவடிக்கைகளினால் சோர்வடைந்து வருகிறார்கள். தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் இந்த சிக்கல்களை-யெல்லாம் சரிசெய்வதற்கு ஒரு வழியைக் கொண்டிருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசி தேசங்களுக்குள்ளும், தேசங்களுக் கிடையிலும் உள்ள மோதல்களைத் தீர்ப்பவர் கர்த்தர் என்று நமக்கு உறுதியளிப்பதின் மூலமாக இந்த பிரச்சனைகளைக் குறித்து விளக்கியிருக்கிறார். அழிவுகரமான ஆயுதங் களடங்கிய பெரிய ஆயுதக் கிடங்குகள் ஒப்படைக்கப்படும்; மேலும் இது போன்ற தீங்கான நோக்கங்களுக்காக முன்பு பயன்படுத்தப்பட்ட அற்புதமான தொழில் நுட்பங்களானது அனைவருக்கும் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வர பயன்படுத்தப்படும். (ஏசா. 2:4). "**என் பரிசுத்த பர்வதமெங்கும்** (ராஜ்யமெங்கும்) **தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை.**" (ஏசா. 11:9). வரவிருக்கும் இந்த நிலைமைகளை நம்முடைய உள்நாட்டு நிலைப்பாட்டில் இருந்து பார்த்தோமானால், நகர வீதிகள் இனி ஆபத்தான இடங்களாக இருக்காது. இனி ஒவ்வொரு-வனுடைய கையும் தன் அயலானுக்கு விரோதமாக இருக்காது. புதிய நிர்வாகத்தின் கீழ் எதுவும் காயப் படுத்தப்படவோ அல்லது தீங்கு செய்யப்படவோ அனுமதிக்கப்படாது. கர்த்தருடைய சரியான வழிமுறைகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லையென்றாலும், தனிப்பட்ட மற்றும் தேசிய விரோதங்கள் எல்லாம் நடுநிலையாக்கப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம். மேலும் இயேசுவினால் சுருக்கமான வடிவில் கொடுக்கப்பட்ட தெய்வீக உடன்படிக்கையின் இரண்டாவது பகுதி

உலகளவில் கவனிக்கப்படும். "**நீ உன்னிடத்தில் அன்பு கூருவதுப் போல, உன் அண்டை வீட்டாரிடத்திலும் அன்பு கூர வேண்டும்.**" (மத். 22:39 - டயக்லாட் மொழிபெயர்ப்பு)

மத சம்பந்தமான சண்டைகள் நிறுத்தப்படும், "**என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை: கேடு செய்வாருமில்லை: சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்**" (ஏசா. 11:9). மனுக்குலத்தாரின் பெரும்பான்மையானவர்கள் வாழ்ந்து மடிந்த இந்த இருள் அகற்றப்பட்டு, மனுக்குலத்தின் ஜீவனின் இரட்சிப்புக்காக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் இயேசு கிறிஸ்து தான் என்பது அனைவராலும் கண்டுணரும்படி இருக்கும். வேறு யாரும் இல்லை. (யோவா. 14:6; அப். 4:12). தேவன் உலகத்தை, அதாவது எல்லா தேசத்தாரையும் மிகவும் நேசித்து, அனைவருக்கும் நிறைவான ஜீவனைக் கொடுப்பதற்காக தம்முடைய குமாரனை அனுப்பினார். ஜீவனுக்கான தெய்வீக அழைப்பில் அனைவரும் இறுதியில் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதானது அடையாளமாக ஏசா. 19:22-25 வரையிலான வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது. அங்கு விசுவாச விஷயங்களில் கசப்பான பகைமையில் இருந்தவர்கள் சமாதானத்தில் ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம். சில ஆதரிக்கும் வேதவசனங்கள் உபா. 29:29 - "**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்: வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.**" ஏரே. 15:16 - "**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்கு தரிக்கப்பட்டிருக்கிறது.**" சங். 119:105 - "**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**"

## ஓர் பிரகாசமான வெளிச்சம்

பெரும்பாலும் வரலாறு முழுவதும், தேவனுடைய வெளிப்படுத்துதலின் வெளிச்சம் மங்கலாக மட்டுமே பிரகாசித்துள்ளது. ஆபிரகாமுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள், தேசிய இஸ்ரயேலின் ஆசாரிப்புகள் மற்றும் நியாயப்பிரமாண உடன்படிக்கைகளில் அடையாளமாக குறித்துகாட்டப்பட்டவை ஆகியவை தேவனுடைய கிருபையான திட்டங்களைப் பற்றிய நிழல்கள் மற்றும் தெளிவற்ற யோசனையை மட்டுமே கொடுத்தது. இயேசுவின் நாட்களை நாம் அடையும் போது வெளிச்சம் அதிகரிக்கிறது. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு இயேசு போதித்த சுவிசேஷம் புரிந்து கொள்ளப்பட்ட போது, உலகத்திற்கான ஆசீர்வாதங்கள் நிலையான தன்மையுடன் இருக்க வேண்டும் என்றும், இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ராஜ்யம் ஆவிக்குரியதாக இருக்கும் என்றும், மேலும் இயேசு குறிப்பிட்ட "உத்தம" இஸ்ரயேலர்கள் என்பது மனப்பான்மை மற்றும் குணாம்சத்தில் நியாயப்பிரமாணத்தின் ஆவியில் வாழ்ந்து தங்கள் தீர்க்கதரிசன விசுவாசத்தை நிலைநிறுத்திய புருஷர்களும், ஸ்திரீகளும் அடங்கியிருப்பார்கள் என்றும் சபை கண்டது.

மெய்யான சபையானது யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இரண்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு "சிறுமந்தையாக" இருக்க வேண்டும், இது ஆவிக்குரிய சுபாவத்துக்கும், பெரிய வல்லமைக்கும் உயர்த்தப்பட வேண்டிய ஒரு வகுப்பாகும். இயேசு ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் என்று நாம் வாசிக்கிறோம். (2 தீமோ. 1:10). இயேசுவின் நாளிலிருந்து இன்னும் அதிகமான வெளிச்சம் பிரகாசிக்கிறது, அவர் முன்னறிவித்தபடியே, "**இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்:... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**" யோவா. 16:12,13.

அப்போஸ்தலர்கள் மரித்த பிறகு, இந்த புதிய சபையானது வழிநடத்துவதற்காக மனித போதகர்களை பார்க்கத் தொடங்கியது. உலகப்பிரகாரமான மற்றும் அதிகாரத்திற்கான இலட்சியத்துடன் தலைவர்களில் பலர் மிக உயர்ந்த பட்டங்கள் மற்றும் பதவிகளை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சுதந்தரத்தின் மீது ஆளுகை செய்ய தொடங்கினார்கள். படிப்படியாக "மதகுருமார்கள்" மற்றும் "பாமரர்களுக்கும்" இடையே ஒரு பிரிவினை ஏற்படுத்தப்பட்டது, கடைசியில் விசுவாசிகளை கடுமையான வேத ஆதாரமற்ற கோட்பாடுகளுக்கு அடிமைப்படுத்த வழிவகுத்தது. இந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைக்காகவும் வேதாகமத்துக்காகவும் ஒரு துணிவான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட போராட்டம் ஏற்பட்டது. அது சீர்திருத்தம் என அறியப்பட்டது. தேவன் தனது வார்த்தைக்காக தைரியமாகப் போராடும் வீரர்களை எழுப்பினார். அவர்களில் லூத்தர், ஸ்விங்லி, மெலாங்டன், விக்ளிப், நாக்ஸ் மற்றும் பலர் இருந்தனர். இன்றைய உலகத்தில் மத சம்பந்தமான காரியங்களில் உள்ள அக்கறையின்மை (உணர்ச்சியின்மை) பொதுவாக மேற்கத்திய சமூகத்தில் காணப்படுகிறது!

அதிகபடியான வன்முறை குற்றங்கள் சொத்து திருட்டு மற்றும் நன்னெறி கோட்பாடுகளின் பரவலான நிராகரிப்பு ஆகியவை பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் ஊடுருவுகின்றது. இதற்கு காரணமான பல சிக்கலான காரணிகள் உள்ளன. ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி மேற்பார்வையிடும் தேவன் மீதான நம்பிக்கையை கைவிடுவது அவற்றில் ஒன்றாகும். தற்போதைய மற்றும் எதிர்காலத்தை பற்றிய எந்தவொரு அறிவுக்கும் தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளுக்கு நாம் திரும்ப வேண்டும். தேவன் அவருடைய தயவுள்ள



**அதைரியமடையாமல் இருங்கள்!**
**போதகர் சார்லஸ் தேஸ் ரஸல் மத். 24:46–47–ன் "அந்த ஊழியக்காரனாக" இருக்கிறார். அவருடைய வேலை நிலைத்திருக்கும்! அவர் குறிப்பிட்டது போல், அநேகர் அன்றும் இன்றும் நிகழ்கால சத்தியத்திற்கு பலத்த எதிர்ப்பாக உள்ளனர். ஆனால் அதைக் கேட்பதற்கு காதுகளும், அதற்கு கீழ்ப்படியும் இருதயங்களும், ஒப்பீட்டளவில் சிலரே இருக்கிறார்கள். அவர்கள் மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள்.**

சித்தத்தின் இரகசியத்தை கிறிஸ்தவ சபைக்கு தெரியப்படுத்தியிருக்கிறார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார், ஏற்ற காலம் வரை புரிந்துக் கொள்ள முடியாத வகையில் அவர் அதை உருவக வார்த்தைகளில் பதிவு செய்துள்ளார். (எபே. 1:9,10,17,18; 3:4-6).

முரண்பாடாக, தீர்க்கதரிசிகளோ அல்லது தேவ தூதர்களோ சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அர்த்தத்தை அறிய ஆவலுடன் விசாரித்தபோது, தேவன் அவர்களுடைய தீர்க்கதரிசனங்களில் மறைக்கப்பட்ட சத்தியங்கள் அவர்களுக்கானவை அல்ல, மாறாக கிறிஸ்தவ யுகத்தை சேர்ந்த நமக்கானவை என்று தேவன் அவர்களிடம் கூறினார் என்று பேதுரு கூறுகிறார் (1 பேது. 1:12). சபையானது அனைத்து சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட வேண்டும் என்று இயேசு வாக்குறுதி அளித்திருந்தாலும், அது படிப்படியாக வெளி வர வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஆயினும் உள்ளுணர்வில் ஆயிர வருஷ யுகத்திற்காக வாஞ்சித்து, சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது; இன்னும் பெரும்பாலான ஜனங்கள் தங்களுக்கான யேகோவா தேவனுடைய கிருபையான நோக்கங்களை தெரிந்து கொள்ளாமல் அறியாமையில் தடுமாறுகிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கக் கூடியதற்கும் அப்பாற்பட்ட, மனுக்குலத்தை வியக்க வைக்கும் அனைவருக்கும் திறந்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் விருந்தை மகா சிருஷ்டிகர் தயார் செய்கிறார்.

செத்துக்கொண்டே இருக்கிற மனுக்குலத்தின் இலட்சியங்கள் மற்றும் புரட்சிகரமான கண்ணோட்டங்களை நியாயப்படுத்தவும் ஊக்குவிக்கவும் பல அறிக்கைகள் (ஒரு பொது பிரகடனம்) எழுதப்பட்டுள்ளன (பார்க்கவும் PT '69, பக்கம் 60). இருப்பினும், நாம் பற்றிக்கொண்டிருக்கும் கொள்கை யேகோவா தேவனுடைய வார்த்தையாகிய: "பத்து கட்டளைகள்!" ஆகும்.

## சரியான நேரத்தில் ஒரு கேள்வி: நம்முடைய போதகரின் வேலை நிலைத்திருக்குமா?

**"எஜமான் வரும் போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக் காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்."** மத்தேயு 24:46-47.

நாங்கள் பதிலளிக்கிறோம்: நிச்சயமாக! தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம் நமது போதகரின் நினைவுகளை நம்மிடையே நறுமணத்துடன் வைத்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம், மேலும் அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்கள் மூலம் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை படிப்பதை, நம்முடைய விசுவாச உண்மைத்துவத்தின் மூலம் நாம் சிறப்பாகச் செய்கிறோம். அவரைத் தங்கள் போதகர் என்று கூறிக்கொண்டவர்களில் பெரும்பாலோர் அவருடைய போதனைகள் மற்றும் நடைமுறை வழக்கங்களிலிருந்து வேகமாக விலகிச் செல்கிறார்கள் என்பதை நாங்கள் நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்கிறோம்; இவ்வாறாக கொழித்தலில், பிரிந்தவர்களால் தப்பறையானது போதிக்கப்பட்டு வருகிறது.

R 2512–ல் உள்ள நம்முடைய போதகரின் வார்த்தைகள்: "நிகழ்கால சத்தியத்திற்கு அநேகரால் எழும் வலிமையான எதிர்ப்பைக் கவனிக்கும் போது, ஒப்பீட்டளவில் சிலரே அதை கேட்க காதுகளையும் மற்றும் அதற்குக் கீழ்ப்படியும் இருதயங்களையும் பெற்றுள்ளனர்; அவர்கள் மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள்."

இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகத்தின் ஆட்சிக் காலத்தின்பொழுது, ஒவ்வொரு யுகத்திலும் இந்த நிலைமை வெளிப்பட்டு வந்திருக்கிறது என்பது எவ்வளவு உண்மை! சில சமயங்களில் உலகம், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவை, எல்லாவற்றையும் ஜெயித்து விட்டதாக தோன்றலாம், மிகவும் பரவலாகவும், மிகவும் இறுமாப்பாகவும், பாவம், தப்பறை, சுயநலம் மற்றும் உலகத்தனமாகிய கூட்டுப் படைகள் அதிகரித்து உலகம் முழுவதும் பரவுகின்றது. இவ்வாறாக இது இருந்தபோதிலும், தேவனுடைய உண்மைத்துவமுள்ள ஊழியக்காரன் சோர்ந்து போகமாட்டான், ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தங்களிலிருந்து இருதயத்தை ஸ்திரப்படுத்துவான். சத்தியத்திற்கான இந்த பஞ்சம் புதிய உடன்படிக்கையின் தொடக்கம் வரையிலும், பூமியில் தேவனுடைய நித்திய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் வரையிலும் நிலவும் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். (மத். 6:9,10; வெளி. 21:1-4). அந்த காலம் எருசலேமில் மூப்பரான பாத்திரவான்களின் உயிர்த்தெழுதலுடன் தொடங்கும் (ஏசா. 2:2-4; எரே. 31:31-34; ரோம. 1:16; 2:9,10). சாத்தானின் தீமையின் ஆட்சி தேவனால் அனுமதிக்கப்பட்டது, நல்ல காரணத்துடன், சர்வ வல்லவரின் மேற்பார்வையின் கீழ் அது கடைசியில் அனைவருக்கும் மிக உயர்ந்த ஆசீர்வாதத்தை விளைவிக்கும். (PT '84, P.73).

மனிதனின் அனுபவம் மற்றும் சாத்தியகூறு ஆகியவற்றின் நிலைப்பாட்டில் இருந்து நமது கேள்விக்கு நாம்

பதிலளிக்க வேண்டும் என்றால், பெரும்பான்மையான சத்திய ஜனங்களிடையே உள்ள போதனைகள் மற்றும் நடைமுறை பழக்கங்களின் போக்கு அவருடைய வேலையை கைவிட்டு மற்றும் அவர் நிறைவேற்றிய காரியங்களை பயனற்றுபோகச் செய்கிற திசையில் உள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இது உண்மையில் நிறை-வேற்றப்படாது என்று நாம் வேத வாக்கியங்களின் அடிப்படையில் நம்புகிறோம்; ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி மனிதனின் பகுத்தறிவு, கடந்த வருஷங்களில் சத்திய ஜனங்கள் மத்தியில் பரந்த மாறுப்பட்ட கலகங்களின் வெளிச்சத்தில் பார்க்கையில் நம்முடைய போதகரின் வேலை நிலைநிற்காது என்று பரிந்துரைக்கும்.

கடந்த வருஷங்களில் அவருடைய போதனைகள் மற்றும் நடைமுறை பழக்கங்களுக்கு எதிராக, இத்தகைய குறிப்பிட்ட கலகங்களில் வெளிப்புற வெற்றியுடன் செயல்பட்ட சக்திகள், இன்னும் சில வருஷங்கள் தொடர்ந்து செயல்-பட்டால், மனுஷீகமாகச் சொல்வதென்றால், நம்முடைய போதகர் செய்த வேலைக்கு எந்த தொடர்பும் இல்லாதவாறு, தங்களை சத்திய ஜனங்களாக உரிமை பாராட்டுபவர்களின் பெரும்பகுதியானோர் தங்களுடைய போதனைகள் மற்றும் நடைமுறை பழக்கங்களை புரட்டக்கூடிய அப்படிப்பட்ட அளவிற்கு போவதை எந்த மனித சக்தியாலும் தடுக்க முடியாது. இது அப்போஸ்தல சபையின் வேலையைத் தக்க வைப்பதற்கு கத்தோலிக்க சபை முயற்சித்ததை விட அதிகமாயிருக்கும். அவருடைய வேலைகளுக்கு எதிரான சொசைட்டியின் மொத்த கலகப் புரட்சிகளின் கண்ணோட்-டத்தில், நம்முடைய போதகரின் போதனைகள், கொள்கைகள், ஒழுங்குகளை சொசைட்டி உண்மையாக செயல்படுத்துகிறது என்று நம்பும் பல சொசைட்டியை சார்ந்தவர்களின் மனநிலையை அளவிடுவது மிக ஆச்சரியமான காரியங் களில் ஒன்றாகும். நிச்சயமாக அத்தகைய ஒரு புரிந்து கொள்ள முடியாத மனப்பான்மை, தொடர்ந்தால், அது நம்முடைய போதகரின் வேலைக்கு எதிராக ஒரு முழுமையான விசுவாச துரோகத்தை சுட்டிக்காட்டும்.

ஆனால் அன்பான சகோதரர்களே, சாதகமற்ற பின்னோக்கிய பார்வை, அம்சம், எதிர்பார்ப்பு போன்றவை இருந்தபோதிலும் நம்முடைய போதகரின் வேலை பூமியிலிருந்து அழியாது என்கிற விசுவாசத்தின் பூரண நிச்சயம் நமக்கு இருக்கிறது! குறித்த காலத்தில் அவருடைய போதனைகள் லேவியரின் தப்பறைகளை பட்சித்து அக்கினியிலிருந்து எந்தவித பாதிப்புமின்றி வெளிப்படும். சத்திய வேலை மற்றும் போலியான சத்திய வேலையின் லேவியரின் கலக முறைகளை அக்கினியால் எரித்த பிறகு, கர்த்தருடைய வேலையை செய்யும் அவருடைய முறைகள் மீண்டும் நிலைநாட்டப்பட்டு, கர்த்தருடைய காரியத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லும். கெட்ட லேவிய தலைவர்கள் அவர்களுடைய புரட்சிகர கலகத்தின் காரண-மாக அக்கினியிலிருந்து இழிவுபடுத்தப்பட்டு வெளியே வருவார்கள், மேலும் அவர்களின் சுயமேன்மையின் காரணமாக தாழ்த்தப்படுவார்கள். நம்முடைய அன்பான போதகருடைய போதனைகள் மற்றும் நடைமுறை பழக்கங்கள் மாறுபாடுள்ள லேவியரின் தோல்விகளுடன் வேறுபட்டு அவர்களுடைய வெற்றிகரமான விளைவுகளால் எல்லா உயர்ந்த மேன்மையுடனும் பிரகாசிக்கும்! விசுவாசம், இந்த முடிவைப் பற்றி முழுமையாக உறுதியளிப்பதால், கர்த்தருடைய ஏற்ற நேரத்திற்காகவும் அதன் நிறைவேறு தலுக்காகவும் அமைதியாக காத்திருக்க வேண்டும்; "**குறித்த காலத்தில்**" "**கர்த்தருடைய வைராக்கியமே இதை நிறை வேற்றும்.**" தற்காலிகமாக அது பாடுபட்டது; தொடர்ந்து ஒரு பகுதியளவு பாடுகளுக்கு உட்படும் - அது சிறிது காலம் கிட்டத்தட்ட முழுவதுமாக பாடுகளுக்கு உட்படலாம் - ஆனால் நிச்சயமாகவே சத்தியம் வல்லமை வாய்ந்தது, அது கடைசியில் வெற்றிபெறும். ஆகவே நிறைவேறுதலான எலெயாசாரான நம்முடைய போதகருக்கு யேகோவா தேவன் கொடுத்த வேலையானது நிச்சயமாக முழுமையாய் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டு இவ்வாறாக நிலைத்திருக்கும். (எண். 3:32; 4:16).

நாம் கர்த்தருடைய இடைவிடாத மேய்ச்சலின் விசாரிப்பின் கீழ் அவருடைய ஆடுகளாக இருக்கிறோம். அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகவோ, கைவிடவோ மாட்டார். "**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.**" (நீதி. 4:18). இது அடையாளமான மேகஸ்தம்பத்திலும், அக்கினி ஸ்தம்பத்திலும் நன்றாய் விளக்கப்பட்டுள்ளது. "நிறைவேறுதலான எகிப்திலிருந்து நிறைவேறுதலான கானானுக்கு சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய ஜனத்தை வழிநடத்துகிற திறன் வாய்ந்த ஏற்ற கால சத்தியத்தையும் அதனுடைய ஆவியையும் அடையாளப்படுத்துகிறது." (E.Vol.8, பக்கம் 622). "அவர் அவிசுவாசிகளுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருளாக ஆகிறார்; அதே சமயம் குறிப்பிட்ட அளவிலான விசுவாசிகளுக்கு, தமக்கு சொந்தமான போதுமான அளவு ஏற்ற கால சத்தியத்தினாலும் அதனுடைய ஆவியினாலும் அவருடைய பரிசுத்த பர்வதமாகிய ராஜ்யத்துக்கு அவர்களை வழிநடத்தி வழிகாட்டவும் அவர் ஒரு போதும் தவறியதே இல்லை. இந்த காரியத்தில் அவர் அவர்களை ஒரு போதும் விட்டு விடமாட்டார்; ஏனென்றால், அது எப்பொழுதும் இருந்தது: மேகஸ்தம்பம் பகலில் அதை மூடியது மற்றும் இரவில் அக்கினிஸ்தம்பம் தோன்றியது. மேலும் அன்பானவர்களே நாம் உறுதியான விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாய் இருக்கும் வரை தேவனுடைய உண்மையான ஜனங்கள் மத்தியில் இருக்கும் நிறைவேறுதலான மேகஸ்தம்பத்-தையும் அக்கினி ஸ்தம்பத்தையும் நாம் எப்பொழுதும் காணலாம்; நாம் எப்பொழுதும் அவர்கள் மீது அது தங்கியிருப்பதை கண்டுகொள்ளலாம்; தேவன் அதை இவ்வாறு வடிவமைத்துள்ளார்." (E8, 631, 632).

நம்முடைய ரஸல் போதகர் மரித்து 107 வருஷங் களுக்கு பிறகும், ஏற்றகால சத்தியமானது தொடர்ந்து

முன்னேற்றமடைந்து வருவதை தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாங்கள் கண்டுணர்ந்து கொள்கிறோம். நம்முடைய போதகரின் வார்த்தைகளில் சத்தியம் ஏற்ற காலத்தில் தொடர்ந்து இருப்பதற்கான சிறப்பு அம்சங்கள் உள்ளது. மற்றும் இந்த கிறிஸ்தவர்கள் அவர்களுடைய மதக்கோட்பாட்டின் வேலிகளால் அதை இழக்கிறார்கள். எடுத்துக்காட்டாக அது நோவா நாளின் ஒரு சத்தியமாக இருந்தது, மேலும் ஆதாமும் மற்றவர்களும் அதை பற்றி எதுவும் அறிந்திராத நிலையில் ஜலப்பிரளயம் வருகிறது என்பது பற்றி அப்போது ஒளியில் நடக்கும் அனைவருக்கும் விசுவாசம் தேவைப்பட்டது. ஜலப்பிரளயம் வருகிறது என்று பிரசங்கிப்பது இப்பொழுது நிகழ்கால சத்தியத்தை பிரசங்கிப்பதாக இருக்காது, ஆனால் மற்ற நேமக சத்தியங்கள் ஏற்றக்காலத்தில் தொடர்ந்து வருகிறது, விளக்கின் வெளிச்சத்தில் நடந்தால், அவைகளை நாம் அறிவோம்.

மேகஸ்தம்பமும், அக்கினிஸ்தம்பமும் நேரடியாக ஆசாரிப்புக் கூடாரத்தின் மீது மட்டுமே தங்கியிருந்தது, அது பிரகாரத்திலோ, பாளையத்திலோ தங்கவில்லை, மூப்பரான பாத்திரவான்களிடத்தில் இருந்ததைப் போலவே, நிறைவேறு தலான பிரகாரத்தில் இருப்பவர்களுக்கும் மற்றும் பாளயத்தில் உள்ள "உண்மையாய் மனந்திரும்பி மற்றும் விசுவாசத்தால்" தற்காலிகமாக நீதிமான்களாக எண்ணப் படுகிற பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் பொருத்தமான பிரகாசிப்பித்தலையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கிறார். எபிஃபெனி பிரகாரத்திலும், எபிஃபெனி பாளையத்திலும் பிரதிஷ்டை செய்தவர்கள், மூப்பரான பாத்திரவான்கள் அவர்களுடைய நாட்களில் இருந்தது போல, ஜனங்களை ஆசீர்வதிப்பதிலும் சந்திப்பதிலும், இப்பொழுது தேவனுடைய வசிப்பிடமாய் இருக்கிறார்கள். (மேலும் ஆவிக்குரிய தெரிந்தெடுப்பில் உள்ள அனைவரும் தெரிந்தெடுக்கப் பட்டதால், "யுகங்களுக்கிடையில் பிரதிஷ்டை செய்தவர்-களான வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் இந்த பெரிய கிருபையைப் பெறுகிறார்கள்)."

மூப்பரான பாத்திரவான்கள் (அடையாளமான கம்பு), சிறுமந்தை (கோதுமை), திரள்கூட்டத்தார் (வாற்கோதுமை), வாலிபரான பாத்திரவான்கள் (பெரும்பயறு) ஆகியவை களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டது என்பதை தேவனுடைய பிரகாசிப்பிக்கப்பட்ட பிள்ளைகள் உணர்ந்து கொள்கிறார்கள்; ஆனால் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் (சிறுபயறு) மற்றும் மீதமுள்ள குவாசி - எலக்ட் (தினை) வகுப்பாரிடம் வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஓ, சுவிசேஷ யுகம் ஒரு விதைப்பின் காலம். நல்ல விதையை விதைத்தவர் மனுஷகுமாரனாக இருக்கிறார். (மத். 13:37). அவருடைய வழிகாட்டுதலின் கீழ் அவருடைய சீஷர்கள் உதவினார்கள், அதைத் தொடர்ந்து ஒரு "அறுவடை" வருகிறது. ஏனெனில் இது பாவம் மற்றும் நியாயப் பிரமாணத்துடன் கசப்பான அனுபவங்களாகிய கலப்பை-யால் உழுவதன் மூலம் மனுஷர்களை உடைத்து ஆயத்தப்படுத்தும் யுகத்திற்கு முந்தியதாக இருந்தது. அதுபோலவே, எத்தனை விதமான விதைகள் இருக்கிறதோ அத்தனை அறுவடைகளும் இருக்கிறது. (1கொரி.15:35-44). ஆனால் ஒழுங்கானது எல்லாவற்றையும் நிர்வகிக்கிறது.

குவாசி - எலெக்ட் வகுப்பார், உண்மையில் தெரிந் தெடுக்கப்பட்ட வகுப்பாரை போல தேவனால் நடத்தப் படுவதால், அவர்கள் அந்த பெயரால் அழைக்கப் படுகிறார்கள். ஜாண்சன் போதகர் அவர்களை பற்றி பேசும்போது "ஆபிரகாமின் வித்தின் ஐந்தாவது வரிசை" (கடைசி வரிசையில் ஆபிரகாமின் ஆயிர வருஷ யுகத்துக்கு முந்தைய வித்து) நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்புகளில் ஒன்றுடன் நெருங்கிய ஒற்றுமையை காட்டுகிறதால் அவர்களை "ஐந்தாவது தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்" என்று குறிப்பிடுகிறார். யோவே. 2:28 மற்றும் ஏசா. 60:14-ல் சொல்லப்பட்ட "குமாரர்களாக" குவாசி-எலெக்ட் வகுப்பார் ஆயிர வருட யுக ராஜ்யத்தில் இருப்பார்கள்; மேலும் ராஜ்யத்தின் ஊழியத்தில் அதிக சிலாக்கியங்கள் அவர்களுக்கு வழங்கப்படும். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கு இது விசேஷமாக உண்மையாக இருக்கும். தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்களை போலவே, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களும் "மரணத்திற்குள்ளாக" பிரதிஷ்டை செய்தவர்கள். பாவம் உச்சக்கட்டத்தில் இருக்கும் வரையிலும், சாத்தான் இந்த உலகத்தின் தேவனாக செயல்படும் வரையிலும், கர்த்தருக்கு எந்தவொரு பிரதிஷ்டையும் விசுவாசத்தினால் செய்யப்பட வேண்டும், "மரணத்திற்- குள்ளாக" அது செய்யப்பட வேண்டியது அவசியம். விசுவாசிகளுக்கு மரணத்தை குறிக்கும் தற்போதைய நிலைமைகளைத் தவிர, அவர்கள் சுயத்துக்கும் உலகத்துக்கும் மரித்து, தேவனுக் கென்று பிழைத்திருக்கிற பிரதிஷ்டையின் உடன்படிக்கையை குறிக்கிறது.

சகோதரர் ஜாலி PT '60, பக்கம் 63-ல் இந்த முன்னேற்றமடைகிற சத்தியத்தை நம் கவனத்திற்கு கொண்டு வந்தார்: தம்முடைய மறைவுக்கு பிறகு அதே பொதுவான ஒழுங்குமுறையை தொடருவதற்கு கர்த்தர் விரும்புகிறார் என்பதில் சந்தேகமே இல்லை. எங்களுடைய வாரிசானவர் நிர்வாக அறங்காவலராக (Executive Trustee) ஊழிய நிர்வாக காரியங்களில் (Business matters) மட்டுமே கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறார், ஆனால் வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் எபிஃபெனி பாளையக்காரர்களின் தலைவராக மிகவும் பரந்த ஊழிய செயல் எல்லையைக் கொண்டிருக்கிறார். வெளிப்படையாகவே, கர்த்தர் ஒரு பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரரை வாலிபரான பாத்திரவான்களின் தலைவராக நியமிக்கமாட்டார், ஏனென்றால் ஜாண்சன் போதகர் வேதவாக்கியங் களிலிருந்து சுட்டிக் காட்டியுள்ளார் (உதாரணமாக யாத். 19:12-21; E.Vol.11, பக்கங்கள் 336, 339-342), ஒரு உயர்ந்த வகுப்பார் மீது அத்தகைய உத்தியோக செயல்பாட்டில் தாழ்ந்த வகுப்பாரை சேர்ந்த ஒருவரை அவர்

நியமிப்பது தேவனுடைய ஏற்பாட்டிற்கு முரணானது. திரள் கூட்டத்தாரின் பூமிக்குரிய தற்காலிக வனாந்தர தங்குமிடத்தின் முடிவிற்குப் பிறகு, அவர் அவருடைய ஜனங்களைத் தலைவர் இல்லாமல் விட்டுவிட்டு, அதிகமான இருளில் அலைந்து திரியவும், அவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமான நிகழ்கால சத்தியத்தை மேலும் வெளிப்படுத்தாமலும்; அவர் அவருடைய ஜனத்தைப் பாதுகாப்பின்றி, கொழித்தல்காரரின் தயவில் விட்டுவிடவும் மாட்டார்; அல்லது நமது வேலையை கலகப் புரட்சி செய்ய அனுமதிக்கவும் மாட்டார்.




தேவனுடைய திட்டத்தில் இந்த நாளுக்கான வெளிச்சம் முன்னேறுகிற சத்தியமாய் இருக்கிறது: 1954-ன் இலையுதிர் காலத்தில் இருந்து பிரதிஷ்டை செய்பவர்கள் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் (இந்த காலத்தில் இருந்து வாலிபரான பாத்திரவான்கள் ஆக முடியாது - லேவி. 12; வெளி. 22:11; E.Vol.10, பக்கம் 114; E.Vol.11, பக்கம் 473), நிச்சயமாகவே இயேசு கிறிஸ்துவை அவர்களுடைய இரட்சகராக விசுவாசித்தவர்கள், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறார்கள்; எனவே இந்த நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் நீதிமான்களாக எண்ணப்படுகிறார்கள். அதே போல மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களும் கூட நீதிமான்களாக எண்ணப்பட்டார்கள். மேலும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் இந்த தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெறவில்லை, ஏனென்றால் அவர்கள் பிரதிஷ்டை செய்து அதை அவர்களுக்கு சொந்தமாக்கினார்கள். உயிர்த்தெழுதலில் எழுப்பப்படும்போது இந்த விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் அவர்களிடமிருந்து எடுக்கப்படுமா? நிச்சயமாக இல்லை! அவர்கள் கர்த்தரில் விசுவாசமுள்ளவர்களாய் மரித்ததால், உயிர்த்தெழுதலில் அவர்கள் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களாகவே வெளியே வருவார்கள்; அவர்களுடைய நிலை இன்னும் அப்படியே இருக்கும். நீதிமான்களாக மரித்து, அவர்கள் நீதிமான்களாகவே எழுப்பப்படுவார்கள்.

இந்த யுகத்தில் ஜீவியத்திற்கான பரீட்சையில் இல்லாவிட்டாலும், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களாக நித்திய ஜீவனுக்காக அவர்களை ஆயத்தம் செய்வதற்கு இந்த ஜீவியத்தின் சில காரியங்களும் ஆயிர வருஷ யுகத்தின் சில காரியங்களும் இருக்கின்றன. இந்த ஜீவியத்தில், ஆபிரகாமின் இரண்டாம் நிலை பூமிக்குரிய வித்தாக உண்மைத்துவமுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க, அவர்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பரீட்சைகளை கடந்து செல்ல வேண்டும். அவர்கள் இந்த இரண்டு கிருபைகளையும் படிகமாக்க வேண்டும். மேலும் அவர்கள் ஒரு பெரிய அளவிலான தன்னலமற்ற அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும், இது மரணபரியந்தம் பிரதிஷ்டையை உண்மையாய் நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கும். ஒரு வேளை சிலர் பரீட்சிக்கப்படாத பூரண அன்பின் அடையாளத்தை அடைவார்கள்.

கர்த்தருடைய எபிஃபெனி அல்லது அப்போகாலிப்ஸின் போது, பரந்த கருத்தில், இக்கட்டு காலத்தின் போது, திரள் கூட்டத்தார் ஆவிக்குரிய சுபாவத்தின் உயிர்த்தெழுதலை பெற்றார்கள். வாலிபரான பாத்திரவான்கள் அவர்களுடைய ஓட்டத்தை முடித்து, "**மேன்மையான உயிர்த்தெழுதலில்**" (எபி. 11:35) மூப்பரான பாத்திரவான்களோடு பங்கு பெற தங்களை தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள். மேலும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் ("அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்ய மாட்டார்கள்; "**நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்**" லூக். 14:14) அவர்களுடைய ராஜ்யத்தின் மகிமைக்காக ஆயத்தப் படுத்தபடுவார்கள். இந்த வகுப்பார்கள், தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாகவும், அவருடைய பரிசுத்த ஆவியை பெற்றிருப்பதாலும் தங்கள் விடுதலைக்காக காத்திருந்து தங்களுக்குள்ளே தவிக்கிறார்கள். ஆம் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் "**அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளார்கள்.**" (1 பேது. 2:9).

தேவனுடைய இரக்கத்தை பெறுபவர்களுக்கு இந்த சிலாக்கியம் இப்பொழுதே உண்மையாக இருக்கிறது. இது ஒரு பரிசாக இருக்கிறது; அவர்கள் அதற்காக ஒன்றும் செய்ய முடியாது; அவர்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறவர்கள் என்று மட்டுமே அவர்களுக்கு உறுதியளிக்கப்படுகிறது. வித்தியாசம் என்னவென்றால், விசுவாசத்தின் காதுகளால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய நற்செய்தி நமக்கு சொல்லப்பட்டதை போல இப்பொழுது வெகு சிலருக்கு மட்டும் கேட்கிற காதும், மற்றும் காண்கிற கண்ணும், தேவனுடைய இரக்கத்தை பாராட்டும் இருதயமும் இருக்கிறது. அவருடைய விசேஷித்த ஜனங்களை தெரிந்தெடுத்த பிறகு, தரிசித்தல் மற்றும் அறிவு பெரும்பாலும் விசுவாசத்தின் இடத்தை பிடிக்கும். உலகமானது அவர்களின் பாவங்களை மன்னித்து, நித்திய ஜீவனை அவர்களுக்கு வழங்கியிருக்கிற கிறிஸ்து இயேசுவில் தேவனுடைய கிருபையை உணர்ந்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் தேவனுடைய மகாபெரிய பரிசாகிய மாபெரும் கொள்ளை பொருளை பங்கிடுவதில் பொதுவாகக் களிகூருவார்கள். ***

# அவர் முதலாவது என்னிடத்தில் அன்புகூர்ந்தார்

He Loved Me First

**"அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்."– (1 யோவா.4:19)**

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக, நமது இருதயத்திலும், மனதிலும் அவரது அன்பிரக்கத்தை நம்மால் உணர முடியும். தேவனிடம் அன்பு கூராமலிருப்பது நீதியை மீறுவதாகும். நாம் அவர் மீதுள்ள அன்பினால் நம்முடைய கொஞ்சமான அனைத்தையும் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தபோது அவர் நமது அன்பின் பரிசை ஏற்றுக்கொண்டார். மற்ற தேவனுடைய பிள்ளைகளுடன் நமது கிறிஸ்தவ நடையில் அவர் நம்மை வழிநடத்துவதில் விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருப்பதற்கு இது நமக்கு ஒரு காரணத்தைத் தருகிறது.

"**நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்**" என்று இந்த வேத வசனம் மிக அழுத்தமாக கூறுகிறது. இது தேவனுடைய அன்பின் விளைவாக பிரதிஷ்டை செய்யப்பட்ட இருதயமானது தேவனுடைய ஊழியத்தில் தன் ஜீவனையே கொடுக்க விரும்புகிறது. "**அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தார்.**" யேகோவா தேவனுடைய அன்பிரக்கத்தை நாம் சாட்சியாகக் கண்டோம், இது சத்தியத்தின் காந்தமாக மாறி, அவரை நோக்கி நம்மைக் கவர்ந்திழுத்தது. "**நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில்**" அவருடைய அன்பை பாராட்டும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். (ரோம. 5:8). தேவனுடைய முன்மாதிரியை, நம் அன்பு, இரக்கம் மற்றும் உதாரத்துவத்தின் ஆவிக்குள் வளர்த்தெடுப்பதின் மூலம் நமது அன்பை அறிவிப்போம். தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய அறிவில் நம்முடைய விசுவாசத்தின் வேர்கள் கீழே ஆழமாக தள்ளப்பட வேண்டும்.

1 யோவா. 4:9-ல் அப்போஸ்தலன் நமக்கு இவ்வாறு விளக்குகிறார்: "**தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.**" வசனம் 10-ஐ வாசிக்கவும்: "**நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.**" 1 யோவா. 4:19-க்கு திரும்புவோம், யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்தவர்களாக நம்முடைய அனுபவத்தின் ஆரம்பத்தை வெளிப்படுத்துகிறார். மேலும் தேவன் நம்மேல் இவ்வளவாய் அன்புகூர்ந்தபடியால் பெரிய விலைக்கிரயம் கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார்; அது நமக்கான பெரிய இரட்சிப்பை அளிக்கும் என்று அந்த நீதியின் உணர்வு நமக்கு கூறுகிறது. குறைந்தபட்சம் நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் பதிலுக்கு நமது நன்றியறிதலைக் காட்டுவதும், அவரிடத்தில் அன்புகூர்ந்து, ஊழியம்




செய்வதும். நம்முடைய கடமையாகும். அன்பின் இந்த தொடக்கத்திற்கு கடமை அன்பு என்று நாம் பெயரளிக்கிறோம். அன்பின் அனைத்து அபிவிருத்திகளுக்கும் இதுவே அடிப்படை. நாம் அறிவிலும் கிருபையிலும் வளரும்போது, அன்பின் உயர்ந்த வளர்ச்சியை அடைகிறோம்.

யேகோவா தேவனுக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் நீதியாக, நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் கடமை அன்பைக் கொடுக்க வேண்டும். பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக நாம் அவர்களை நம்முடைய கொஞ்சமான எல்லாவற்றோடும்கூட அன்பு கூருகிறோம். இந்த கிருபையின் கோட்பாட்டின் அடிப்படையில், புரிந்து உணரவும், நினைவில் கொள்ளவும், கற்பனை செய்யவும், பகுத்தாராயவும் திறன் கொண்ட மனங்களையும், அற்புதமான சன்மார்க்க வல்லமைகளுடைய இருதயங்களுடன் விசுவாசம், நம்பிக்கை, இச்சையடக்கம், பொறுமை மற்றும் பிறனிடத்தில் கொண்டுள்ள அன்பு ஆகியவற்றில் மத சம்பந்தமான வல்லமையினால் அலங்கரிக்கப்பட்ட இருதயங்களைக் கொண்ட மனங்களைக் கொண்டிருக்க தேவன் நம்மை அனுமதிக்கிறார். தட்பவெப்ப நிலை, வளிமண்டலம், பருவங்கள், தங்குமிடம் மற்றும் நமது பூமிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் நிறைந்த ஒரு அழகான மற்றும் பலன்தரக்கூடிய செழிப்பான பூமியில் தேவன் இரக்கத்துடன் நம்மை வைத்திருக்கிறார்.

முழுமையாகப் பிரதிஷ்டை செய்தவர்களுக்கு தேவன் தொடர்ந்து மத சம்பந்தமான நன்மைகளைக் கூட்டி சேர்த்துகொண்டே வருகிறார், சில காரியங்கள் அனைத்து மனுக்குலத்திற்காகவும் செய்யப்பட்டுள்ளன. அனைத்து மனுக்குலத்தின் நன்மைக்காக, இயல்பு, கனம் மற்றும் உத்தியோகம் ஆகியவற்றில் பிதாவுக்கடுத்த நிலையில் இருந்து மனிதனாக மாற தன்னுடைய ஒரே பேறான

குமாரனை தாழ்மையான நிலையில் உலகத்தில் அனுப்பி, தமக்கு பிரியமான பொக்கிஷத்தை பரலோகத்திலே அவர் வெறுமையாக்கினார். இயேசு முழு மனுக்குலத்தின் மீட்பராக மாற, அவர் தன்னுடைய ஜீவனை ஒரு பலியின் மரணத்துக்குள் கொடுக்க வேண்டியிருந்தது. கிறிஸ்துவின் பலியால் தங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக அனைவரையும் மனந்திரும்புமாறு அவர் அழைக்கிறார். நிச்சயமாகவே மனுக்குலத்திற்கான இந்த ஆசீர்வாதங்களுக்காக தேவனிடமும் கிறிஸ்துவிடமும் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்புகூர வேண்டும். ஆ! எனக்கன்பான சகோதரர்களே, நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவன் மற்றும் கிறிஸ்துவிடமாக நீதியை பயிற்சி செய்து, அபிவிருத்தியடைந்து வளர்ந்து பெருகுவோமாக; மூல ஆதாரமாக தேவனும், பிரதிநிதியாக இயேசுவும் நமக்கு இருக்கிற மற்றும் நாம் கொண்டிருக்க வேண்டும் என்று நம்புகிற எல்லா நன்மைகளையும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிருஷ்டிப்பு, பரிபாலனம், மீட்பு, அறிவுறுத்தல், நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவற்றை நாம் சரியாக கருத்தில் கொள்ளும்போது, அவை நமக்கு நன்மைகளாக இருக்கின்றன என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும்.

தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நன்மைகளானது, நல்விசுவாசத்துடன் அவருடைய கிருபை நிறைந்த சலுகைகளுக்கு மறுமொழியளிக்க நமக்கு இடங்கொடுக்கின்றன. கிறிஸ்துவினிமித்தம் அவருடைய வாக்குத்தத்தத்தை நம்புகிற பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கும், கிறிஸ்துவின் நீதியை அவர்களுக்கு சாட்டுதல் செய்யவும், அவர்களை அவருடன் ஐக்கியத்தில் எடுத்துக்கொள்வதற்கும், அவர்கள் நீதியான வாழ்க்கை வாழ உதவுவதற்காகவும், அவர் இந்த நான்கு ஆசீர்வாதங்களை கிருபையுடன் வழங்குகிறார்: (1) விசுவாசத்தால் நீதிமானாகுதல். (2) தங்களை அவருக்கென்று பிரதிஷ்டை செய்வதற்கான அழைப்பு. (3) தேவனுடைய திட்டத்துக்காக கிறிஸ்துவின் உபத்திரவத்தின் அடிச்சுவடுகளில் நடப்பது. (4) கிறிஸ்துவின் சாயலில் அபிவிருத்தி அடைதல்.

இந்த ஆசீர்வாதங்கள், முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனிடமும், கிறிஸ்துவிடமும் அன்புகூர வேண்டிய கடமையை கிறிஸ்தவர்களுக்கு அளிக்கிறது. ஆம், தேவன் நமது நேர்மையான இருதயத்தை விரும்புகிறார், மேலும் அவர் அதை நீதி.23:26-ல் இவ்வாறு கேட்கிறார், ''**என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா: உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக.**'' இவ்வுலகில் அநேகர் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணிக்கவில்லை, எனவே அவர்கள் அவருடைய மெய்யான ஜனங்களாக மாறவில்லை, அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள ஆசீர்வாதங்களுக்காக தங்கள் சிருஷ்டிகராகவும், போஷிப்பவராகவும்

## உன் இருதயத்தைக் காத்துக்கொள் (மத். 5:21-37)



இருக்கும் அவருக்கு நன்றி செலுத்துவதில்லை, அவர்களுடைய நன்றியறிதலை அவருக்கு வெளிப்படுத்துவதே அவர்கள் செய்ய வேண்டிய சரியான காரியம் ஆகும். சங் 145:9 கூறுகிறது, ''**கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர்: அவர் இரக்கங்கள் அவருடைய எல்லா கிரியைகளின்மேலும் உள்ளது.**'' யேகோவா தேவன் தம்முடைய கிருபையை எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கிறார். ''**அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்**'' என்று மத்.5:45 கூறுகிறது. எனவே, ஜீவனுக்குரிய பரிசு உட்பட, இவ்வளவு உதாரத்துவமாக வழங்கப்பட்ட அவரது ஆசீர்வாதங்களுக்காக, தங்கள் மாபெரும் சிருஷ்டிகருக்கு நன்றி செலுத்துவதற்கு அனைவருக்கும் அநேக காரணங்கள் உள்ளன.

உலகத்தில் நீதிமானாக்கப்படாத ஜனங்களுக்கான தேவனுடைய நன்மையைப் பற்றி நாம் இப்போது வாசித்தோம்; நம்முடைய இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவிலிருந்து பிரகாசிக்கும் அறிவொளியை தேவன் யாருடைய இருதயங்களில் பிரகாசிக்க செய்தாரோ, அவர்களுக்கு அவருடைய அன்பிரக்கம் எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்ள இது உதவுகிறது. 2 கொரி. 4:6-ல் தம்முடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு தேவன் மற்றொரு செய்தியை வைத்திருக்கிறார், ''**இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.**'' தேவ தயவைப்பெற்றவர்கள் எல்லா சூழ்நிலைகளிலும், நிலைமைகளிலும் வியாதி, வலி, துக்கம் மற்றும் மரணம் போன்றவற்றில் அவர்கள் தாழ்த்தப்பட்டாலும் அல்லது உயர்த்தப்பட்டிருந்தாலும் சந்தோஷத்துடன் நன்றி செலுத்த முடியும், செலுத்த வேண்டும். நிச்சயமாக, கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமான ஒரு பகுதியாக, கிறிஸ்தவர்கள் தனது நன்றியைக் காட்ட வேண்டும். தேவனுடைய அன்பிரக்கம் நமது எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் இருக்க வேண்டும், மேலும் நமது துதிப்பாடல்களிலும் ஜெபங்களிலும் கலந்திருக்க வேண்டும்; தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் விசுவாச உண்மைத்துவமுள்ள மற்றும் திறமையான ஊழியத்தை செய்ய இது நமது இருதயங்களை கண்டிப்பாக நிரப்ப வேண்டும். இந்த நன்றியறிதலும் நன்றியுணர்வும் தான் பவுலும் சீலாவும்

நம்முடைய எஜமானருக்கு மிகவும் விசுவாச உண்மைத் துவத்துடன் ஊழியம் செய்ய உதவியது. அவர்களுடைய சீஷத்துவத்தின் விலையாக கொடூரமான அடிகளினால் அவர்களின் முதுகுகளில் காயங்களைப் பெற்ற அதே நேரத்தில் அவர்கள் பிலிப்பியில் உள்ள சிறைச் சாலையில் கிறிஸ்துவுக்காக துன்பப்படும் சிலாக்கியத்திற்காக துதி பாடவும் நன்றி செலுத்தவும் முடிந்தது. (அப்.16:23, 25, 33).

## "வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்" சங்.65:11

கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் அனுபவிக்கும் இரக்கங்களையும் ஆசீர்வாதங்களையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்பது எவ்வளவு பொருத்தமான-தாக இருக்கிறது. இல்லையெனில் இந்த வாழ்க்கையின் கவலைகளும், அழுத்தமும், ஐசுவரியத்தின் வஞ்சகமும் நமது கவனத்திலிருந்து அவைகளை மறைக்கும் அளவுக்கு நம் மனங்களிலும் இருதயங்களிலும் குவிந்துவிடும். இறுதியில், தேவ கிருபையின் நீரூற்றுகளை முற்றிலுமாக மூடிவிடும், அவை திறந்திருந்தால், தொடர்ந்து ஊழியம் செய்யவும், பரிசுத்த ஆவியில் நாம் மகிழ்ச்சியடையவும், புத்துணர்ச்சியடையவும் உதவுகிறது.

நமது அன்றாட ஆசீர்வாதங்களைப் பரிசீலிக்க நேரம் எடுத்துக் கொள்வதோடு, நமது பாதையில் வழிநடத்திய அனுபவங்கள், நம்மிடம் வந்துள்ள உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், நாம் மனதில் கொள்ள வேண்டும். அவர்களில் சிலர் உலகத்தில் பொது-வானவர்கள், மற்றவர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள், மேய்ப்பரை அறிந்தவர்கள் மற்றும் அவரைப் பற்றி அறிந்தவர்களால் பாராட்டப்பட்டவர்கள்; யார் அவருடைய சத்தத்தைக் கேட்கிறார்களோ, அவைகளுக்கு அவருடைய கோலும் தடியும் வழிகாட்டியாக இருக்கும்.

வருடத்தின் இறுதியில், நாம் செய்வதைப் போலவே, நமது அனுபவங்களைப் பற்றி இன்னும் பெரிய மற்றும் விரிவான கண்ணோட்டத்தில் திரும்பிப் பார்க்கவும், நாம் பயணித்த வழியை கவனமாகப் பார்க்கவும், முன்னேற்-றத்தைத் தடுக்கும் படிகள் எவை என்றும் இயேசுவின் அடிச்சுவடுகளில் சரியான படிகள் எவை என்பதையும் நன்கு பரிசீலிக்கவும் நேரத்தை ஒதுக்குவோமாக. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜ்யத்தில் ஓர் பங்கை பெற நாம் தகுதியானவர்களாகக் கருதப்பட்டால், இலக்கை நோக்கி நம்மை நெருங்க செய்யும் "எல்லைக் கோட்டினை" நாம் நிச்சயமாக அடைய வேண்டும். ஒரு குழந்தையின் மனதில் ஒரு வருடம் மிக நீண்ட காலமாக இருக்கலாம்; இருப்பினும், தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு, ஜீவியத் தின் செயல்பாடுகளால் நிரப்பப்பட்ட மிகவும் அபிவிருத்தி-யடைந்த மனதுடன், அது மிகவும் குறுகியதாகத் தோன்று கிறது. அடைய விரும்பும் அனைத்து விஷயங்களையும் நிறைவேற்ற அனுமதிக்கும் அளவுக்கு மிக வேகமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இத்தகைய அனுபவங்கள் அனைத்து மனுகுலத்திற்கும் பொதுவானது; இருப்பினும், கிறிஸ்தவன், குறிப்பாக அவன் கிறிஸ்துவின் பாட சாலையில் சிறிது காலம் இருந்து, அறிவிலும் கிருபையிலும் ஓரளவு வளர்ந்திருந்தால், வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கும் பாராட்டுவதற்கும் மற்றவர்களை விட அதிக திறனை கொண்டவனாயிருப்பான். ஏனென்றால், அவனது இயல்பான மனம் எவ்வளவு தான் நிலையற்றதாக இருந்தாலும், இப்போது அவனிடம் "கிறிஸ்துவின் சிந்தை" "தெளிந்த புத்தியின் ஆவி" உள்ளது. இது விஷயங்களை அவற்றின் உண்மையான மதிப்பீட்டில் பார்க்க இயல்பான மனதை விட மிகச் சிறந்ததாகும்.

நாம் முன்னேற்றமடைந்த கிறிஸ்தவர்களாக ஆண்டு முழுவதையும் திரும்பிப் பார்க்கும்போது, வாழ்க்கையின் புயல்களையும் அதன் சூரிய வெளிச்சத்தையும், துக்கங் களையும் அதன் சந்தோஷங்களையும், கண்ணீர்களையும் அதன் புன்னகையையும் மற்றும் தேவனுடைய வார்த்தை-யின் புத்திமதிகளையும் நினைவு கூருகிறோம். வாழ்க்கை-யின் சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை, சரியான பாடங்களாக ஏற்றுக்கொண்டால், அவை மறைவான ஆசீர்வாதங்கள் என்பதை உறுதிப்படுத்தும், - அவை இனி வரப்போகும் ஜீவியத்தில் "**மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது**" (2 கொரி. 4:17) என்பதே. ஒரு உண்மையான கிறிஸ்தவனின் இருதயம் தவறு செய்வதில் களிகூருவதில்லை, ஆனால் தேவனுடைய வார்த்தையில் விலையேறப்பெற்ற விசுவாசத்தைக் கொண்டுள்ள அதே போன்ற சகோதரர்- களுடன் ஐக்கியம் கொள்ளுவதில் இப்போது களிகூருகிறது. தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக, தேவன் தம்முடைய நன்மையால் வருடத்தை முடிசூட்டுகிறார் என்பதை உணர்ந்து, திருப்தியுடன் சென்ற வருடத்தைப் பின்னோக்கிப் பார்க்கலாம்!

தம்முடைய புத்திக்கூர்மையுள்ள சிருஷ்டிகளுக்கு ஏற்ற பல வகையான வாசஸ்தலங்களும், நிலைமைகளும், மற்றும் ஜீவியின் நிலைகளும் அவருடைய வீட்டில் இருப்பதாக யேகோவா தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அறிவித்திருக்கிறார். இயேசுவானவர் தாம் போய், "அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவது" அவசியம் என்று கூறினார். அவர்கள் அந்த ஸ்தலத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை-யும் அவர்களுக்காக ஒரு ஸ்தலம் ஆயத்தப்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் அறிந்திருப்பதால், நம்முடைய பரலோக பிதா அளிக்கும் எல்லாவிதமான ஒழுக்கப் பயிற்சியிலும் களிகூர முடிகிறது, ஏனெனில், அவர்கள் பிதாவின் வீட்டில் எந்த இடத்தை நிரப்புவதற்காக அழைக்கப்பட்டார்களோ அந்த இடத்தை நிரப்புவதற்காக தங்களை ஆயத்தபடுத்துவது எஜமானருடைய வேலையின் ஒரு பகுதியாயிருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்துக் கொள்கிறார்கள்.

அந்த நோக்கத்திற்காக, நாம் சங்.116:12-14-ஐ பயன்படுத்துவோம், "**கர்த்தர் எனக்குச் செய்த எல்லா**

### தேவனுடைய திட்டம் முன்னோக்கிச் செல்கிறது

"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." (வெளி. 21:1,4)

**உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுக் கொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.**" "**அவருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன்**": ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும், நாம் நம்முடைய நேரத்தை கொடுக்க வேண்டும். நாம் அதை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதை தேவன் வழிநடத்துவார். "**அவருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன்**" என்பதை நாம் சரியாக வாசிக்கிறோமா என்று உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். "**எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும்**": நாம் பெற்றவை மட்டுமல்ல, இன்னும் வரப்போகிறவைகளையும் சேர்த்து! "**நான் பாத்திரத்தை எடுத்துக்கொள்வேன்**": ஏனெனில் நமக்கு விசுவாசமும், நம்பிக்கையும் இருப்பதால் ஒவ்வொரு நாளும் எனக்கு அளிக்கப்படும் அனுபவங்களை நான் ஏற்றுக் கொள்வேன்! நம்முடைய யேகோவா தேவனை, பரலோக பிதாவின் "நாமத்தை" முழு நம்பிக்கையுடன் கூப்பிடுவேன்.

"**நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை செலுத்துவேன்**": பிரதிஷ்டை, பலி தியாகம், மரணபரியந்தம் விசுவாச உண்மைத்துவம் ஆகியவற்றின் சிலாக்கியத்துக் காக தேவனுக்கு நன்றி கூறுவேன். "**இப்போது**": உடனடியாக தேவனுடைய அழைப்பு கேட்டவுடனேயே. "**அவருடைய ஜனங்களுக்கு முன்பாக**": நமது செயல், வார்த்தை, நடத்தை ஆகியவற்றின் மூலம் நான் பிரதிஷ்டை செய்த பிள்ளைகளில் ஒருவன் என்பதற்கு நாம் சாட்சியம் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம், ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து ஜலப்பிரளயம் 1656 ஆண்டுகள்; ஆதிப்பிதாக்களின் யுகம், 659 ஆண்டுகள்; யூத யுகம், 1845 ஆண்டுகள்; சுவிசேஷ யுகம், 1845 ஆண்டுகள்; மற்றும் ஆயிர வருட யுகத்திற்குள், 149 ஆண்டுகள் தொடர்ந்து முன்னேறி வந்திருக்கிறது: விரைவில் நம் அன்பான இயேசுவின் ஆயிர வருட மத்தியஸ்த ஆட்சியில்: யோவா. 5:28-29-ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, "**இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.**"(NKJV). கடந்து செல்கிற பழைய வருடத்திலிருந்து, வருகிற புதிய ஆண்டாகிய 2024-ல் இந்த மாற்றத்தை செயல்படுத்த இதுவே உகந்த தருணமாகும். நம்பிக்கையுடன் சொல்வோம், சங். 103:2-ல் "**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.**" தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் என்ற வகையில் நாம் ஆவியோடும் அதன் புரிதலுடனும் முன்னேறிச் செல்வோம்.

இந்த சந்தர்ப்பத்தில், நமது அன்பான மீட்பரின் வார்த்தைகளை நமக்கு பொருத்திப் பிரயோகிக்கலாம், "**உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**" (மத்.13:16-17).

விசுவாசமானது மிகவும் இன்றியமையாததாக இருக்கும் ஒரு யுகத்தில் நாம் வாழ்கிறோம். கேட்பதற்குரிய காதும், மனத்தாழ்மை, சாந்தம், சத்தியத்தின் மேல் பசிதாகம் போன்ற ஆவிக்குரிய புரிதலுக்கு தேவையான குணங் களைக் கொண்டவர்கள் மாத்திரம் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்கிறார்கள். இந்த பண்புகள் குறைவுபடும் போது அது சுயசித்தம் மற்றும் ஒருவருடைய சொந்த கருத்துகளை நோக்கி நாடிச் செல்லுகிறது. நம்முடைய கர்த்தரின் வார்த்தையை கேட்பவர்களில் பெரும்பாலானவர்கள் தேவையான இந்த குணப் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை, எனவே நம் கர்த்தர் வெளிப் படையாகப் பேசாதது ஒரு கிருபையாகும்; அவர் வெளிப்படையாக பேசியிருந்தால் அது சத்தியத்தின் மதிப்பைக் குறைத்து, கேட்பவர்களுக்கு தீங்கை ஏற்படுத்தியிருக்கும். (ரோம. 11:32).

அவருடைய சீஷர்களுக்கு அவர் தனிப்பட்ட முறையில் விளக்கினார், ஏனெனில் அது அவர்களின் வளர்ச்சிக்கு தேவையான "பிரயோஜனமுள்ள போதனையின்" ஒரு பகுதியாக இருந்தது. (2 தீமோ. 3:16). இந்த ஆசீர்வாதமானது இன்றுவரை அவரிடம் முழுவதுமாக பயபக்தியுடன் இருக்கும் பிரதிஷ்டை செய்த சீஷர்களுக்கு அப்படியே உள்ளது, ஏனென்றால் அவர்களுக்கு மட்டுமே "**கர்த்தருடைய இரகசியம்**" வெளிப்படுத்தப்படுகிறது. (சங். 25:14).

தேவனும் இயேசுவும் நமக்காக வெளிப்படுத்திய மிகுந்த அன்புக்கு பதிலளிக்கும் வகையில் அவர்களிடம் நன்றியையும், நன்றியுணர்வையும் கொண்டிருப்போமாக. ஒரு கணம் கூட அதனை இழப்பது என்பது ஆவிக்குரிய நோயின் அத்தாட்சியாகக் கருதி வருத்தப்பட வேண்டும், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக குணப்படுவதற்காக பெரிய மருத்துவரிடம் செல்ல வேண்டும் ஒரு மெய்யான கிறிஸ்தவனின் மனப்பான்மை நம்மிடம் எப்போதும் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பதும்,

ஜெபிப்பதும் குறிப்பாக அவர் நமக்காகச் செய்த, செய்துகொண்டிருக்கிற மற்றும் செய்யப்போகும் அனைத்தையும் பற்றிய புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும், தேவன் மற்றும் இயேசுவின் மீது கடமை அன்பு மற்றும் வைராக்கியத்தையும் நமக்குக் கொண்டு வரும். ஏனெனில் நமக்கான ஆசீர்வாதங்களுக்காக இவ்வளவு பெரிய விலை அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. ''**தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.**'' (2 கொரி.9:15). ''**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.**'' (கொலோ.3:15,17). ''**கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே: ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் (மனம்) தேவனை மகிமைப்படுத்துங்கள்.**'' (1 கொரி.6:20; 7:23; 10:31). நாம் நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாவோமாக. (ரோம.12:2).

யேகோவா தேவனுடைய அன்பிரக்கத்தைப் பற்றிய நமது ஆராய்ச்சி நேரத்தை, சங். 63:3-ம் வசனத்தோடு முடிவுக்கு கொண்டு வருவது எவ்வளவு மகத்தானது! ''**ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது: என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.**'' தேவன் இரக்கம் மற்றும் அன்பு ஆகியவற்றை இயல்பான குணப்பண்பாக கொண்டிருக்கிறார். அன்பிரக்கமானது அவரது கரத்தின் புத்தியுள்ள சிருஷ்டிகளுக்கு மட்டுமல்லாமல், புத்தியற்ற சிருஷ்டிகளுக்கும் - அவருடைய அனைத்து சிருஷ்டிகளுக்கும் செல்கிறதாக இருக்கிறது. அவர் நீதிமான்கள் மேலும் அநீதிமான்கள் மேலும் தனது கிருபையையும், தயவையும் காட்டுகிறார். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரிய பிரகாசத்தையும், தமது மழையையும் அனுப்புகிறார். ஆனால் அன்பான இருதய குணப்பண்புகள் கொண்டவர்களுக்கு ஓர் விசேஷமான கிருபையும், ஓர் விசேஷமான அன்பையும் வைத்திருக்கிறார். ஒவ்வொரு நல்ல மனிதனும் நல்ல மற்றும் உயர்ந்த குணமுள்ள ஒவ்வொரு மற்ற நபரிடமும் அன்புகூருவது போல, அத்தகைய குணநலன்களை கொண்டவர்கள் அவரால் அன்புகூரப்படுகிறார்கள்.

தேவன் பரிசுத்த தூதர்கள் மீது அத்தகைய அன்பைக் கொண்டுள்ளார். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு அவன் மீதும் அவருக்கு அப்படிப்பட்டதொரு அன்பு இருந்தது. பாவத்திற்குப் பிறகு, ஆதாமின் சந்ததியில் யாரெல்லாம் தங்கள் பாவத்தை உணர்ந்து, அவரிடம் திரும்பி, அவருடைய சித்தத்தைச் செய்ய விரும்புகிறார்களோ அவர்களிடமாக அவருடைய அன்பிரக்கத்தின் மென்னுணர்வு இருக்கிறது. அவருடைய அன்பிரக்கம், இவர்களுக்காக ஒரு அற்புதமான ஏற்பாட்டைச் செய்ய அவரை வழிநடத்தியது: சிலர் பூமிக்குரிய இயல்புடையவர்களாக இருப்பார்கள், பூமி ஏதேனிய பரிபூரணத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகு,




பூமியில் என்றென்றும் வாழும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். மற்றவர்களுக்கு ஆவிக்குரிய நிலையில் இருப்பதற்கான ஏற்பாடு செய்திருக்கிறார். மெய்யாகவே, ''கடலின் அகலத்தை போல ஓர் பரந்த தன்மை தேவனுடைய கிருபையில் உள்ளது!''

ஆனால், மனப்பூர்வமாய் பாவம் செய்பவர்களின் நிலை என்ன? மனப்பூர்வமாய் பாவம் செய்பவர்களிடம் தேவன் அன்புகூர முடியாது, இந்தப் புரிந்துகொள்ளுதல் நீதியுடன் ஒத்திசைவாக இருக்கிறது. அறிவுக் குறைபாடால் அல்லது சரியான புரிதல் இல்லாமல் தேவனுடைய சட்டத்தை மீறும் அறியாமையில் உள்ளவர்களிடம் நாம் அன்புகூரலாம்; ஆனால், மனப்பூர்வமாய், இருதயத்தில் நோக்கத்தோடு தவறு செய்யும் துன்மார்க்கனை நாம் நேசிக்க முடியாது. சீர்திருத்த முடியாத துன்மார்க்கரிடத்தில் தேவனுக்கு அன்பு இல்லை என சங்.145:20-ல் கூறப்பட்டுள்ளது: ''**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.**'' தம்முடைய நீதியின்படி வருபவர்கள் மட்டுமே நித்திய ஜீவனுக்குரிய ஆசீர்வாதத்தை அனுபவிக்க அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் நித்திய மகிழ்ச்சியைப் பெறுவார்கள். அவர்கள் என்றென்றும் அவருடைய அன்பான தயவைப் பெறுபவர்களாக இருப்பார்கள்.

சங்கீதக்காரன் தன்னுடைய சொந்த அனுபவங்களில் தேவனுடைய அன்பிரக்கத்தை ருசித்துப் பார்த்திருக்கிறார். இஸ்ரயேலின் ராஜாவாக அவர் அபிஷேகம் பண்ணப்பட்டபோது, தேவனுடைய பார்வையில் தனக்கு தயவு கிடைத்ததை அவர் அறிந்திருந்தார். பின்பு, அவர் தவறான காரியங்களைச் செய்தபோது, தேவன் அவரைக் கண்டித்தார், அன்பால் தண்டித்தார், ஏனென்றால் தாவீது தேவனுடைய சொந்த இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதராக இருந்தார்- தேவனுடைய சித்தத்தை சரியாக செய்ய விரும்பினார். ஒரு திசைகாட்டியின் ஊசியானது, வட துருவத்தை நோக்கிச் செல்லும் அதன் இயல்பான நிலையில் இருந்து சில சந்தர்ப்பங்களில் விலகிவிடக்கூடும், அதுபோல

சில நேரங்களில் சில ஈர்ப்புகள் தாவீதின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி அவரை தவறான பாதைக்கு இட்டுச் சென்றன.

தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களில் சிலராகிய நாம் நம் மீது வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய அன்பிரக்கத்தைப் பெற்றிருக்கிறோம். அவருடைய மகத்தான மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் பெற்றிருக்கிறோம். நாம் அவரது விசேஷித்த அன்பைப் பெற்றவர்கள். இந்த அன்பையும் இந்த மகத்துவமான வாக்குத்தத்தங்களையும், அவருடைய கிருபையின் மகத்தான ஏற்பாடுகளையும் நாம் எவ்வளவு அதிகமாக மதித்துணர்ந்து பாராட்டுகிறோமோ, அந்த அளவுக்கு நமது இருதயங்கள் நன்றியுணர்வோடு பதிலளிக்கின்றன. எவ்வளவாய் அவருடைய அன்பு நம்முன் மெய்யாகிறதோ அவ்வளவாய் அவரது ஊழியத்தில் நமது ஜீவிதத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறோம்.

நாம் இயேசுவைப் போல் இருந்து, எல்லாவற்றைப் பார்க்கிலும் பிதாவின் தயவையே விரும்புவோமாக. பிதாவின் ஏற்பாட்டின் மூலம், இயேசு இந்த புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு திறந்தார். நாம் அவருடைய சீஷர்களாக மாறுவதன் மூலம், தேவனுடைய விசேஷமான அன்பின் கிருபையையும், ஒப்பிடமுடியாத வாக்குத்தத்தங்களையும் அவரோடுகூட பங்கெடுத்து கொள்ளலாம். இது "**ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு**" மட்டுமே வழங்கப்படுகிறது. நிச்சயமாக நம்முடைய உதடுகள் நமது தேவனை துதிக்கும்! நமக்கிருக்கும் எல்லாவற்றிற்கும் மற்றும் நாம் பெற வேண்டுமென்று நம்பிக்கையுடனிருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரைத் துதிப்போம்! நிச்சயமாக நம்முடைய உதடுகள் நமது தேவனை துதிக்கும்!

நமக்கிருக்கும் எல்லாவற்றிற்கும் மற்றும் நாம் பெற வேண்டுமென்று நம்பிக்கையுடனிருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரைத் துதிப்போம். தேவனுடைய அன்பிரக்கத்தைப் பற்றிய பாடல்#19-ஐ பாட நாம் ஊக்குவிக்கிறோம்.

## அவருடைய நேசமான அன்பிரக்கம்

(1) "என் ஆத்துமாவே எழும்பி களிகூரு"; உன் மகா மீட்பரின் புகழைப் பாடு. அவர் நியாயமாக என்னிடம் ஒரு பாடலைக் கேட்கிறார். அவருடைய அன்பிரக்கம், ஓ எத்தகைய தாராளமானது!

(2) நான் விழுந்து அழிந்து போகையில் அவர் என்னை கண்ணோக்கினார்; என் மேல் குறைகள் இருந்தபோதிலும் அவர் என்னை நேசித்தார், நான் இழந்த நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றினார். அவருடைய அன்பிரக்கம், ஓ எவ்வளவு மகத்தானது!

(3) பலமான எதிரிகளின் ஏராளமான சேனைகளும், எதிர்ப்பதற்கு போராட அதன் வானத்தை நோக்கிய வழியில் ஒன்று சேர்ந்திருக்கிறது. அவர் பாதுகாப்பாக தனது சபையை வழிநடத்துகிறார். அவருடைய அன்பிரக்கம், ஓ எவ்வளவு பலமானது!

(4) உபத்திரவம் இருண்ட மேகத்தைப் போல் அடர்த்தியாக கூடி, உரத்த இடிச் சத்தத்துடன் இருக்கும்போது, அவர் என் ஆத்துமாவுக்கு நெருக்கமாக எப்போதும் நிற்கிறார். அவருடைய அன்பிரக்கம், ஓ எவ்வளவு நல்லது!

(5) பூமியின் நீதியான ராஜா வரும்போது, அவர் மீட்கப்பட்ட தன் ஜனங்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வார். நான் பேரின்ப கரையிலிருந்து பாடுவேன், அவருடைய அன்பிரக்கம், எப்பொழுதும் அதிகமானது.

**கோரஸ்:** அவருடைய அன்பிரக்கம், அன்பிரக்கம், அவருடைய அன்பிரக்கம், ஓ, எவ்வளவு தாராளம்! அன்பிரக்கம், அன்பிரக்கம், அவருடைய அன்பிரக்கம், ஓ, எத்தகைய மகத்துவமானது!

**தேவனுடைய வார்த்தையில் களிகூருங்கள்!**

**தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக சென்ற வருடத்தை திருப்தியுடன் பின்னோக்கித் திரும்பிப் பாருங்கள்; ஏனெனில் தேவன் தம்முடைய நற்குணத்தினால் முழுமையாக நிறைந்த மற்றொரு வருடத்தைக் நமக்கு கொடுத்திருக்கிறார்!**



# வேதாகமம் பேசுகிறது

BIBLE TALKS

**ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்**

## யாக்கோபு ஏசா

### ஆதி. 25:24—26:5,12—27:45

ஈசாக்கு மற்றும் ரெபோக்காளின் குமாரர்கள் யாக்கோபு மற்றும் ஏசா. அவர்கள் இரட்டைப் பிள்ளைகள், ஏசா முதற்பிறந்தவன், அவன் சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் போலவும் வெளிப்பட்டான்.

இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபோது, ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்தான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான். ஏசா வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்; ரெபெக்காளோ யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்.

ஒரு நாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி : அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான் இதனாலே அவனுக்கு ஏதோம் என்கிற பேர்

உண்டாயிற்று. அப்பொழுது யாக்கோபு: உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு என்றான். அதற்கு ஏசா: இதோ, நான் சாகப்போகிறேனே, இந்த சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு என்றான். அப்பொழுது யாக்கோபு : இன்று எனக்கு ஆணையிட்டுக் கொடு என்றான்; அவன் யாக்கோபுக்கு ஆணையிட்டு, தன் சேஷ்ட புத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்போட்டான். அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்டான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான்.

ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை அல்லாமல் பின்னும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று; அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராருக்குப் போனான்.

## பூமியிலுள்ள சகல தேசங்களுக்கும் ஒரு ஆசீர்வாதம்

கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்கு சொல்லும் தேசத்திலே குடியிரு; இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப் படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக் கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

பின்பு ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்; அவன் ஐசுவரியவானாகி வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். அவனுக்கு ஆட்டு மந்தையும், மாட்டு மந்தையும், அநேக பணிவிடைக் காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமை கொண்டு, அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர் வெட்டின துரவுகளை யெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்.

அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்விடு; எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனா-னாய் என்றான். அப்பொழுது ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்து, தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்த பின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான். ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள்.

கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே வாக்குவாதம் பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிட்டான் வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக் குறித்தும் வாக்குவாதம் பண்ணினார்கள்; ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான்.

பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்து போய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக் குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான். அங்கேயிருந்து பெயெர்செபாவுக்குப் போனான் அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார். அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள்.

## ஓர் சமாதானத்தின் உடன்படிக்கை

அபிமெலேக்கும் அவன் சிநேகிதனாகிய அகுசாத்தும் அவன் சேனாபதியாகிய பிகோலும், கேராரிலிருந்து அவனிடத்துக்கு வந்தார்கள். அப்பொழுது ஈசாக்கு அவர்களை நோக்கி: ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்? நீங்கள் என்னைப் பகைத்து, என்னை உங்களிடத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டீர்களே என்றான். அதற்கு அவர்கள் : நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று கண்டோம்: ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாக வேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணி-னோம் நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பி விட்டது போல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக் கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள். அவன் அவர்களுக்கு விருந்து பண்ணினான், அவர்கள் புசித்துக் குடித்தார்கள். அதிகாலையில் எழுந்து ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக் கொண்டார்கள். பின்பு ஈசாக்கு அவர்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் அவனிடத்திலிருந்து சமாதானத்-தோடே போய்விட்டார்கள்.

அந்நாளில்தானே ஈசாக்கின் வேலைக்காரர் வந்து, தாங்கள் துரவு வெட்டின செய்தியை அவனுக்கு அறிவித்து, தண்ணீர் கண்டோம் என்றார்கள். அதற்கு சேபா என்று

பேரிட்டான்; ஆகையால் அந்த ஊரின் பேர் இந்தநாள்வரைக்கும் பெயெர்செபா என்னப்படுகிறது.

ஏசா நாற்பது வயதானபோது ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூகீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

ஈசாக்கு முதியர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான். அப்பொழுது அவன் நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன். ஆகையால் நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக் கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான், ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில், ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும்படி வனத்துக்குப் போனான்.

## யாக்கோபு இரண்டு வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டு வந்தான்

அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்கோபை நோக்கி: உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவை அழைத்து: நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக் கொண்டுவா என்று சொல்லக்கேட்டேன். ஆகையால், என் மகனே, என் சொல்லைக் கேட்டு, நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய். நீ ஆட்டுமந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டுவா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன். உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டுபோக வேண்டும் என்றாள்.

அதற்கு யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளை நோக்கி: என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்தவன், நான் ரோமமில்லாதவன் ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்: அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என் மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக் கொள்வேனே என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லைமாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என்னிடத்தில் கொண்டுவா என்றாள்.

அவன் போய் அவைகளைப் பிடித்து, தன் தாயினிடத்தில் கொண்டுவந்தான்; அவனுடைய தாய் அவன் தகப்பனுக்கு பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்தாள். பின்பு, ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்தில் இருந்து தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு உடுத்தி, வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போட்டு; தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தாள்.

அவன் தன் தகப்பனிடத்தில் வந்து, என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: இதோ இருக்கிறேன்; நீ யார், என் மகனே என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி: நான் உமது மூத்தமகனாகிய ஏசா; நீர் எனக்குச் சொன்னபடியே செய்தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, நீர் எழுந்து உட்கார்ந்து நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசியும் என்றான். அப்பொழுது ஈசாக்குத் தன் குமாரனை நோக்கி: என் மகனே, இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்டது என்றான். அவன்: உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார் என்றான். அப்பொழுது ஈசாக்கு யாக்கோபை நோக்கி: என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்ட வா என்றான். யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையில் கிட்டப்போனான்; அவன் இவனைத் தடவிப்பார்த்து; சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள் என்று சொல்லி, அவனுடைய கைகள் அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப் போல ரோமமுள்ளவைகளாயிருந்தபடியினாலே இன்னான் என்று அறியாமல், அவனை ஆசீர்வதித்து, நீ என் குமாரனாகிய ஏசாதானோ என்றான்; அவன் நான்தான் என்றான். அப்பொழுது அவன்; என் குமாரனே, நீ வேட்டையாடிக் கொண்டு வந்ததை நான் புசித்து, என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி அதை என் கிட்டக் கொண்டுவா என்றான்; அவன் அதைக் கிட்டக் கொண்டு போனான்; அப்பொழுது அவன் புசித்தான்: பிற்பாடு, திராட்சரசம் அவனுக்குக் கொண்டு வந்து கொடுத்தான், அவன் குடித்தான்.

## ஈசாக்கு தன்னுடைய ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு அருளினார்

அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய்; என்றான் அவன் கிட்டப்போய், அவனை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல இருக்கிறது. தேவன் உனக்கு வானத்துப் பனியையும்

பூமியின் கொழுமையையும் கொடுத்து மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக; ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசா வேட்டையாடி வந்து சேர்ந்தான்.

அவனும் ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்து, தன் தகப்பனண்டைக்குக் கொண்டு வந்து, தகப்பனை நோக்கி: உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக என்றான். அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு: நீ யார் என்றான்; அதற்கு அவன்: நான் உமது மூத்த மகனாகிய ஏசா என்றான். அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப் பட்டவனாகவும் இருப்பான் என்றான்.

ஏசா தன் தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே, மிகவும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறி, தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்றான் அதற்கு அவன்: உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் என்றான். அப்பொழுது அவன் : அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம்போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக்கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்து வைக்கவில்லையா என்றான். ஈசாக்கு ஏசாவுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, நான் அவனை உனக்கு எஜமானாக வைத்தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு ஊழியக்காரராகக் கொடுத்து, அவனைத் தானியத்தினாலும் திராட்சரசத்தினாலும் ஆதரித்தேன்; இப்பொழுதும் என் மகனே, நான் உனக்கு என்னசெய்வேன் என்றான். ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வாதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழுதான், அவனுடைய தகப்பனிடம் இருந்து ஒரு ஆசீர்வாதத்தை தேடினான்.

## யாக்கோபை கொன்றுவிட ஏசா நினைத்தான்

அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனுக்குப் பிரதியுத்தரமாக: உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும் உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும். உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து, உன் சகோதரனைச் சேவிப்பாய்; நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப்போடுவாய் என்றான்.

யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டான். மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது அவள் தன் இளைய மகனாகிய யாக்கோபை அழைத்து: உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

ஆகையால், என் மகனே, நான் சொல்வதைக் கேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானில் இருக்கிற என் சகோதரனாகிய லாபானிடத்துக்கு ஓடிப்போய், உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சிலநாள் அவனிடத்திலே இரு. உன் சகோதரன் உன் மேல் வைத்த கோபம் தணிந்து, நீ அவனுக்குச் செய்ததை அவன் மறந்தபின், நான் ஆள் அனுப்பி, அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துப்போக வேண்டும்? இவ்வாறாக ரெபெக்காள் யாக்கோபோடே பேசினாள். ***

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Laymen's Home Missionary Movement

Bro. V. Vincent Jeyakumar
[Representative of India]
#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY